# கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்

T14567
R005D05
T.14567

பா. வே. மாணிக்க நாயக்கர்,
B. E., M. C. I., M. I. E.

திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் பல துறையிலும் வல்லுநர். அவர் அறியாத கலை இல்லை. பொறியியல் (Engineering) அவர்தம் வாழ்க்கைத் தொழில்.

அவர் எதற்கும் அஞ்சாதவர்; தாம் கண்ட உண்மையை உயிர்கொடுத்தும் நாட்டவல்ல பெற்றியர். அவரது வரலாற்றை உணர்வோர் பல்கலை வேட்கையுறுவர்.

அவர் 'கால்குலோகிராப்' என்றதொரு புதுமையான கருவியை அமைத்தார். இக் கருவியின் மூலம் 'ரீயின்போர்ஸ்ட் கான்கிரீட' அமைப்பு முறையில் ஏற்படும் சிக்கலான கணக்குகளை மிக எளிதில் தீர்த்துவிடலாம்.

அவரது தமிழ்த் தொண்டு இணையற்றது. ஒலி இலக்கண ஆராய்ச்சியில் அவர் பல காலம் ஈடுபட்டு உலகத்திற்கே பயன் தரத்தக்க ஒரு சிறந்த உண்மையைக் கண்டார். உலகிலுள்ள மக்கள் பேசும் எத்தகைய ஒலியையும் தமிழ் ஒலி கொண்டு உச்சரிக்க முடியும்

# கம்பன் புளுகும்
# வால்மீகி வாய்மையும்

திரு. பா. வே. மாணிக்க நாயக்கர்,

B. E., M. C. I., M. I. E.

முதற் பதிப்பு – ஜனவரி 1955.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | பதிப்புரை ... | 1 |
| 2. | நான்முகம் ... | 2 |
| 3. | கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்... | 12 |
| 4. | பின் இணைப்பு ... | 53 |

திரு. பா. வே. மாணிக்க நாயக்கர்,

B. E., M. C. I., M. I. E.



# பதிப்புரை

பேரறிஞர் திரு. பா. வே. மாணிக்க நாயக்கரைத் தமிழுலகம் நன்கறியும். அவர்தம் பல்துறை வல்லமையைக் குறித்து வியக்காத அறிஞ ரில்லை. அவருடைய நூலாகிய இதனை யான் வெளியிடும் பேறு பெற்றதைக் குறித்துப் பெருமிதம் எய்துகிறேன்.

**கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்** என்ற இந் நூல் திரு. மாணிக்க நாயக்கர் அவர்களால் இறுதியாக எழுதப் பெற்ற தாகும். தமிழகத்தில் இப்போது தலைசிறந்த பத்திரிகை களில் ஒன்ருக விளங்கும் '**கலைக்கதிர்**'ல் பல பகுதிகளாக இந் நூல் வெளியிடப் பெற்றது. அப்பகுதிகளைத் தொகுத்து, இந்நூல் வடிவில் வெளியிடுதற்கு இசைந்த 'கலைக்கதிர்' ஆசிரியர் திரு. **ஜி. ஆர். தாமோதரன்** அவர்களுக்கும், திரு. மாணிக்க நாயக்கரின் திருமகனுர் **பா. முருகமாணிக்கம்** அவர்களுக்கும் யான் பெரிதும் கடமைப்பட் டுள்ளேன். இந்நூலினை இத்துணை அழகு பொலிய அச்சிட்டுக் கொடுத்த **கலைக்கதிர் அச்சகத் தாருக்கு** நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்.

இந்நூலின்கண் ணுள்ள தமிழ்ப் பாடல்களின் பொருள்கள் பின் இணைப்பாக இந்நூல் இறுதியில் சேர்க்கப்பட் டுள்ளன. அனைவரும் இந்நூற் பொருளை எளிதில் உணர்ந்து பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தோடேயே பாடல்களின் பொருள்கள் இதன்கண் இறுதியில் தரப்பட் டுள்ளன.

இவ்வரிய நூலினை நந்தமிழ் மக்கள் பல்லாயிரக் கணக் கில் படித்துப் பயன்பெறுவர் என்று நம்புகிறேன்.

கோவை,
26-1-1955.

போ. ரா. கிருஷ்ணமூர்த்தி

# நூன்முகம்

---

தமிழகத்தின் தலைசிறந்த அறிஞர்களுள் நனி சிறந்தவர் திரு. பா. வே. மாணிக்க நாயக்கர். அவர் பல துறையிலும் வல்லுநர். அவர் அறியாத கலை இல்லை யெனலாம். பொறியியலைத் (Engineering) தம் வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டவர். எனினும், அப்பொறியியலே அன்றி, வானநூல், விலங்குநூல், தரைநூல், தத்துவம், இசை முதலியவற்றிலும் ஆன்ற புலமை வாய்ந்தவர். அவருக்குப் பன்மொழிப் பயிற்சியும் உண்டு. இவருடைய தமிழ்ப் புலமையைப் பற்றிக் கூறவேண்டிய தில்லை. இன்னும் இவர் பல கைத்தொழில்களில் கைதேர்ந்தவராய் விளங்கினர். தையல்வேலை, பின்னல்வேலை, தச்சுவேலை, ஓவியம், படப்பிடிப்பு (photography) முதலியவைகளில் அவர் திறமை வியத்தற்குரியது. அவர் ஒரு பல்கலைக் கொள்கலம்.

**மாணிக்க நாயக்கர்** வாழ்க்கையில் எதற்கும் அஞ்சாதவர். தாம் கண்ட உண்மையை உயிர் கொடுத்தும் நாட்டவல்ல பெற்றியர் அவர். அவரது வரலாற்றை யுணர்வோர் பல்கலை வேட்கை யுறுவர். எத்துணை மெலிந்த நெஞ்சினரும் வலிமை பெற்றவராய் வீறு கொண்டு எழுவர்.

அவர் பிறந்த ஊர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த **பாகல்பட்டி** என்னும் சிற்றூர். அவருடைய பெற்றோர் **வேங்கடசாமி** நாயக்கரும், **முத்தம்மாளும்** ஆவர். அவருக்குத் தமையனார் ஒருவர் உண்டு. அவர் பெயர் திரு. **பா. வே. பொன்னுசாமி** நாயக்கர் என்பது. இவரும் தமிழில் மிகச் சிறந்த புலமை வாய்ந்தவர். திருக்குறள், கம்பராமாயணம், பெரியபுராணம் முதலிய நூல்களின் பல பாடல்களுக்கு மிக நயமான பொருள் உரைக்கும் அரிய திறம் பெற்றவர் அவர்.

மாணிக்க நாயக்கர் தமது பன்னிரண்டாம் வயதுக்குமேல் கல்வி பயிலத் தொடங்கினார். அவர் தமது பன்னிரண்டாம் வயதில் இறந்துவிடுவார் என்று சோதிடர் ஒருவர் கூறியதை நம்பி அவருடைய பெற்றோர் அவரை அதுவரை பள்ளிக்கு அனுப்பவில்லையாம். தம் பன்னிரண்டாம் வயதில் கல்வி தொடங்கிய நம் நாயக்கர் அவர்கள் இருபத்தைந்தாம் வயதிற்குள் பொறியியல் புலமை பெற்றுச் சென்னை அரசாங்கத்தில் உதவிப் பொறிவலாளர் (Assistant Engineer) தொழிலேற்றார். விரைவில் பொறிவலாளர் (Executive Engineer) பதவிக்கும் அடுத்துக் கண்காணிப் பொறிவலாளர் (Superintending Engineer) பதவிக்கும் உயர்த்தப் பெற்றார். அவர் 1912-ம் ஆண்டு நவம்பர்த் திங்களில் வழக்கியல் கல்வி (Barrister-at-law) பெறுவதற்காக

வும் 'ரீயின்போர்ஸ்ட் கான்கிரீட், (Reinforced Concrete) பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவும் இங்கிலாந்து சென்ருர். 'ரீயின்போர்ஸ்ட் கான் கிரீட்' ஆராய்ச்சியை மான்செஸ்டர் நகராண்மைத் தொழிலியற் பள்ளியில் (Municipal School of Technology, Manchester) நிகழ்த்தினுர். அதன் பயனுய் அவர் கால்குலோகிராப் (Calculograph for reinforced concrete) என்றதொரு புதுமை யான கருவியை அமைத்தார். இக்கருவியின் மூலம் 'ரீயின்போர்ஸ்ட் கான்கிரீட்' அமைப்பு முறையில் ஏற்படும் பெருஞ் சிக்கலான கணக்குகளை மிக எளிதில் தீர்த்துவிடலாம். மாணிக்க நாயக்கரது பெரும் பொறியியல் புலமையையும், திறமையையும் வியந்து இங்கிலாந்தில் புகழ்பெற்ற பொறியியல் பேரறிஞர்கள் அவரைப் பாராட்டிப் போற்றினர். ஆனுல் நம் நாட்டிலோ அவர் கண்ட 'கால்குலோ கிராபை'ப் பற்றியோ, அல்லது அவரது பெரும் பொறியியல் புலமையைப் பற்றியோ ஒரு பேச்சில்லை.

சேலம் மாவட்டத்தி லுள்ள மேட்டூர் அணைக்கு முதன் முதல் இடம் தெரிந்தெடுத்துத் திட்டம் வகுத்தவர் மாணிக்க நாயக்கரே ஆவர். ஆனுல் மேட்டூர் அணையின் வரலாற்றில் அவருடைய பெயரைக் காணமுடியாது!

மாணிக்க நாயக்கரின் தமிழ்த் தொண்டு மிகப் பெரியது; இணையற்றது. ஒலி இலக்கண (Univer-asl phonetics) ஆராய்ச்சியில் அவர் பல காலம்

ஈடுபட்டு உலகத்திற்கே பயன்தரத்தக்க ஒரு சிறந்த உண்மையைக் கண்டார். உலகிலுள்ள மக்கள் பேசும் எத்தகைய ஒலியையும் தமிழ் ஒலிகொண்டு உச்சரிக்க முடியும் என்பது அவர் ஆராய்ந்து தெளிந்த உண்மை. அவர் தமிழ் நாட்டில் பல இடங்களில் தாம் கண்ட இவ்வுண்மையைப் பல சொற்பொழிவுகள் மூலம் விளக்கியிருக்கிறுர். அவரைச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஒலியிலக் கணப் பேராசிரியராக அமர்த்தி அவர் கண்ட ஆராய்ச்சிகளை நம் நாட்டில் பலருக்கும் பயன்படுமாறு செய்ய வேண்டும் என்று பேரறிஞர்கள் பலர் கருதினர்; அதையொட்டிப் பல தீர்மானங்கள் தமிழகத்தின் பல இடங்களிலிருந்து அரசாங்கத் தாருக்கும், சென்னைப் பல்கலைக் கழகத்தாருக்கும் அனுப்பப் பெற்றன. ஆனுல் அவர்களில் எவரும் அத்தீர்மானங்களுக்குச் செவி சாய்த்ததாகத் தெரியவில்லை.

'கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்' என்பது மாணிக்க நாயக்கரின் இறுதிச் சொற்பொழிவு. இது பல்லாவரத்தில் முதுபெரும் புலவர் **மறைமலையடிகளார்** முன்னிலையில் நிகழ்த்தப் பெற்றது. அச்சொற்பொழிவே அழகான இந்நூல் வடிவாக மிளிர்கின்றது.

இந்நூலின் தலைப்பு கம்பனைப் பழிப்பதுபோலத் தோன்றலாம். இந்நூல் கம்பனைப் பழிக்கின்றதா அல்லது புகழ்கின்றதா என்பதனை இதனைப் படிப்

போர் ஆய்ந்து தெளிய வேண்டுவ தொன்று. இந் நூலாசிரியரின் முக்கிய நோக்கமாவது, வால்மீகி இராமாயணத்தில் கண்ட பண்டைய ஆரியப் பழக்க வழக்க ஒழுகலாறுகளைத் தெளிவுபடுத்துவதேயாம்.

மாணிக்க நாயக்கர் அவர்கள் கம்பன் காவியத் தைப் பலமுறை ஆழ்ந்து படித்தவர். அதன் பாக் களைப் பலகாலும் சுவைத்தவர். பல பாடல் களுக்கு நுட்பமான பொருள் கூறும் வன்மையர். அவருடைய இன்னுயிர்த் துணைவியார் **தாயாரம்மாள்** அவர்களும் கம்பராமாயணத்தில் மிக்க ஈடுபாடு உடையவர். நம் நாயக்கர் அவர்களின் தமைய னர் திரு. பொன்னுசாமி நாயக்கர் அவ்வம்மையா ருக்குக் கம்பராமாயணப் பாடம் சொல்வது வழக்கமாம். அவர் கூறிய பாடல்களின் பொருள் களை அவ்வம்மையார் தம் கொழுநரிடத்தில் சொல்லுவார்களாம். மாணிக்க நாயக்கர் ஒவ்வொரு முறையும் தம் தமையனர் கூறிய பொருளுக்கு மாறுன பொருள் கூறுவாராம். இங்ஙனம் இரு திறத்துப் பொருள்களையும் அவ்வம்மையார் கேட்டு மிக்க பயனடைந்ததாக அவர்கள் என்னிடம் கூறு வதுண்டு. கம்பராமாயணப் பாடலின்கண் நம் நாயக்கர் அவர்கள் கொண்டிருந்த ஆர்வம் இதனின் றும் நன்கு விளங்கும்.

அவரது உண்மை உள்ளத்தை ஓராது நாமக்கல் கவிஞர் திரு. **வே. இராமலிங்கம் பிள்ளை** அவர்

கள் அவரைப் பற்றி 'என் கதை' என்னும் தம் நூலில் கீழ்க் கண்டவாறு கூறுகின்றார்.

"கம்பராமாயணத்தை மிகச் சிறந்த கவிதையாகவும், தமிழ் இலக்கியமாகவும் கொண்டாடுவார் என்றாலும் இராமாயணத்தை ஆரியர்களுடைய ஏற்றத்தைச் சொல்லும் நூலாகவே மதிப்பார். ஆரிய மன்னனாகிய இராமனைச் சிறப்பித்து, திராவிட மன்னனாகிய இராவணனைக் குறைத்துப் பேசுகின்ற ஒரு ஆரியக் கவியினால் ஆக்கப்பட்ட கதையாகத் தான் இராமாயணத்தை மாணிக்க நாயக்கர் மதித்தார். 'இராமாயணம்' என்ற பெயர் 'இராவணாயனம்' என்று இருக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார். 'இராவணாயனம்' என்ற ஒரு நூலைத் தாம் எழுதப் போவதாக, அதற்கு அவர் குறிப்புகளை எழுதிக்கொண் டிருந்ததும் எனக்குத் தெரியும். சுருங்கச் சொன்னால் இன்றைக்குக் கம்பராமாயணத்தைக் குறைத்துப் பேசுகின்ற கட்சி மாணிக்க நாயக்கர் காலத்திலேயே ஆரம்பிக்கப் பட்டதென்றால் அது தவறாகாது. பிற்காலத்தில் 'சுயமரியாதை' இயக்கத்தை ஆரம்பித்து, கம்ப ராமாயணத்தை எரித்துவிட வேண்டும் என்ற **ஸ்ரீ ஈ. வே. இராமசாமி** நாயக்கரும்கூடத் தாம் மாணிக்க நாயக்கரிடத்தில் கேட்டுக்கொண்ட பாடத்தைத்தான் காரியத்தில் காட்ட முன்வந்தாரோ என்று நான் எண்ணுவ துண்டு."

இதைப் படிப்போர் ஒவ்வொருவரும் மாணிக்க நாயக்கர் அவர்கள் கம்பராமாயணத்தைக் குறைத்துப் பேசுகின்றவர் என்றும், கம்பராமாயணத்தை எரிக்கும் இயக்கத்திற்கு அவரே அடிப்படைக் காரணமாவார் என்றும் முடிவு செய்வர் என்பதில் ஐயமில்லை. மாணிக்க நாயக்கர் உயிரோடிருந்து நம் கவிஞர் எழுதியுள்ளதைக் கண்ணுறுவாராஞல் அவர் உள்ளம் எவ்வளவு வருந்தும் என்று கூற முடியாது. கவிஞர் அவர்கள் மாணிக்க நாயக்கரிடத்துக் கலை பயின்றவர். அவரோடு ஆறுமாதம் வடநாடு முழுதும் சுற்றிவந்தவர். அவர்கள் இருவரும் வடநாட்டில் இருந்த பொழுது கவிஞர் அவர்கள் சில சமயங்களில் பொழுது விடிந்த பிறகும் தூங்கிக்கொண் டிருப்பாராம். அப்போதெல்லாம் மாணிக்க நாயக்கர் அவர்கள்,

"உறங்கு கின்ற கும்பகன்ன வுங்கண் மாய வாழ்வெலாம்
இறங்கு கின்ற தின்றுகாண் எழுந்திராய் எழுந்திராய்"

என்ற கும்பகர்ணப் படலத்துப் பாட்டை வேடிக்கையாகப் பாடி அவரை எழுப்புவது வழக்கமாம்.

இங்ஙனம் கவிஞர் அவர்கள் மாணிக்க நாயக்கரோடு மிக நெருங்கிப் பழகும் பேறு பெற்றும் அவர் கம்பராமாயணத்தின்பால் கொண்டிருந்த உண்மைக் கருத்தை உணராது, அவரைப் பற்றித் தவருக எழுதியிருப்பதை நினைக்குந் தோறும் நெஞ்சம் வருந்துகின்றது.

நமது நாட்டில் இலக்கியத் திறனாய்வுக்கு (Literary Criticism) மதிப்பில்லை. அதைத் தக்க படி புரிந்துகொள்ளவும் திறமில்லை. ஒரு நாட்டின் இலக்கியங்கள் வளஞ் செறிந்து வளர்வதற்கு மிக இன்றியமையாததாய் அமைவது இலக்கியத் திறனாய்வு. மேனாடுகளில் சிறந்த இலக்கியங்கள் பல்கிக் கிளைப்பதன் காரணம், அங்கு அறிஞர்கள் இலக்கியத் திறனாய்வுகளுக்கு உரிய மதிப்பீந்து அவற்றைப் போற்றுவதேயாம். ஒரு நூலின் குறை நிறைகளை ஆராய்ந்து தெளிவுபடுத்தினால் அன்றி அந்நூலின் உண்மை மதிப்பு எப்படி விளங்கும்?

மாணிக்க நாயக்கர் கம்பராமாயணத்தைப் பற்றிப் பேசியவை யனைத்தும் அந்நூலின் திறனாய்வே யாம். 'இராமாயணம்' என்ற பெயர் 'இராவணாயனம்' என்று இருக்கவேண்டும் என்று அவர் சொல்லியது உண்மையே. கம்பராமாயணத்தில் இராவணன் பல அரிய பண்புகளை உடையவனாக மிளிர்கின்றான். கம்பன் கூறும் அவனது பெறலரும் பண்புகளைப் படிக்கும்போது அவன் காவியத் தலைவனாதற்குத் தகுதியுடையவன் என்று பலருக்குத் தோன்றக்கூடும். மாணிக்க நாயக்கர் தமதாராய்ச்சியில் தோன்றியதை நேர்மையாக எடுத்துரைத்தார். ஆனால் இதைக் கொண்டு அவர் கம்பராமாயணத்தைக் குறைத்துப் பேசியதாகக் கொள்வது பொருந்துவ தாகாது.

மேனுட்டுப் பெருங்கவியாகிய மில்டன் பாடிய ''சுவர்க்க நீக்கம்' (Paradise Lost) என்ற நூலில் சாத்தான் என்பவன் இறைவனையே எதிர்த்துப் போரிடுகின்ருன். எனினும் கவி அவனைப் பல அரிய பண்புகள் பொருந்தியவனுகச் சித்தரித்திருக்கிருர். இதனுல் டிரைடன் (Dryden), சர் வால்டர் ராலே (Sir Walter Raleigh), டில்யார்ட் (E.M.W. Tillyard) முதலிய அறிஞர்கள் சாத்தான்தான் காவிய வீரனுதற் குரியவன் என்று கருதுகிருர்கள். 'இறைவனை எதிர்த் துப் போராடுகின்ற ஒருவனைக் காவிய வீரனுகக் கொள்வதா? இது அடுக்குமா?' என்று நெஞ்சம் துணுக்குற்று, அப்படிக் கூறுகிறவர்கள் மில்டன் காவியத்தைப் பழிப்பவர்களேயாவர் என்று அவர்கள் மீது மேனுட்டார் எவரும் குற்றஞ் சாட்டியதாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக அவ்வறிஞர்கள் எழு திய விளக்கங்களை அந்நாட்டவர் விரும்பிக் கற்கின் ருர்கள். இதனுலன்ருே அந்நாட்டு இலக்கியங்கள் சீரும் சிறப்புமெய்தி ஓங்குகின்றன.

கவிஞர் அவர்கள் மாணிக்க நாயக்கரைப் பற்றி எழுதியுள்ளவற்றில் முன்னுக்குப்பின் முரணுக அமைந்திருப்பதைக் காணலாம்.

மாணிக்க நாயக்கர், 'கம்பராமாயணத்தை மிகச் சிறந்த கவிதையாகவும் தமிழ் இலக்கியமாக வும் கொண்டாடுவார்' என்று முதற்கண் குறிப் பிடுகிருர். இறுதியில் ''பிற்காலத்தில் 'சுயமரியாதை'

இயக்கத்தை ஆரம்பித்துக் கம்பராமாயணத்தை எரித்துவிட வேண்டும் என்ற ஸ்ரீ ஈ. வே. இராமசாமி நாயக்கரும்கூடத் தாம் மாணிக்க நாயக்கரிடத்தில் கேட்டுக்கொண்ட பாடத்தைத்தான் காரியத்தில் காட்ட முன்வந்தாரோ என்று நான் எண்ணுவதுண்டு" என்று எழுதுகிறார். கம்பராமாயணத்தை மிகச் சிறந்த கவிதையாகவும், தமிழ் இலக்கியமாகவும் போற்றும் மாணிக்க நாயக்கர், அக்காவியத்தை எரிக்கும் அளவிற்குப் பெரியார் இராமசாமி நாயக்கருக்கு அதன்பால் வெறுப்பூட்டியிருப்பார் என்று நம்பமுடியுமா?

மேலும், பெரியார் அவர்களின் பண்புகளை நந் தமிழகம் நன்கு அறியும். அவர் பிறர் சொல் கேட்டு நடக்கும் பெற்றியர் அல்லர்; தாம் உண்மையெனக் கண்டதை உறுதியோடு நிலைநாட்டும் வீரப் பண்பு வாய்ந்தவர். அவர் மாணிக்க நாயக்கரிடத்தில் கேட்ட பாடத்தைச் செயலில் காட்ட முன் வந்தாரோ என்று கவிஞர் அவர்கள் எண்ணுவது பொருந்ாது.

உண்மையில் மாணிக்க நாயக்கர் கம்பன் காவியத்தை வெறுப்பவ ரல்லர். அதனை விரும்பிப் போற்றுபவரே யாவர். இந்நூலை ஆழ்ந்து படிப்போர் இவ்வுண்மையை உணரலாம்.

இந்நூலுக்கு யான் நூன்முகம் எழுதும் பேறு பெற்றதைக் குறித்து மிக்க மகிழ்ச்சியுறுகிறேன். பேரறிஞர் மாணிக்க நாயக்கர் அவர்கள் செய்துள்ள தமிழாராய்ச்சிகள் மிகப் பல. அவைகள் நந்தமிழகத்திற்குப் பெரும்பயன் அளிக்கத் தக்கவை. அவைகள் அனைத்தும் வெளிவர கோவை, "கலைக்கதிர்" அச்சகத்தார் போன்றவர்கள் முயல்வார்களாக!

கோவை,
19—1—1955.

**தா. ஏ. ஞானமூர்த்தி.**

★

# கம்பன் புளுகும் வால்மீகி வாய்மையும்

★━━━━━━━━★

"கம்பன் புளுகும், வால்மீகி வாய்மையும்" என்னும் துணிபை முன்னீடாக இட்டு, யான், இக் கல்வி கேள்வி முற்றிய பெருங்குழுவில் பேசவந்த துணிவே எனது புல்லறிவாண்மையைச் சுட்டிக் காட்டும் குறிக்கொம் பாகும். எனினும், இத்தகைய வெறுஞ் சொல்லையும் பெருஞ்சொல்லாகக் கொண்டு சீரியோராகிய நீவிர் கேட்பிரேல் நுங்கள் பெருமிதத்தை நிலை நாட்டினீர் ஆவீர்கள்.[1]

'இறையு ஞானமிலாதவென் புன் (சொலை)
முறையி னூலுணர்ந் தீரு முனிவிரோ'?

---

1 இக் கட்டுரை திரு. நாயக்கர் அவர்களாலேயே எழுதப் பெற்றது. தமது இறுதிச் சொற்பொழிவை வரிவடிவில் ஆக்கி அச்சிடத் தொடங்கினார்; எக்காரணத்தாலோ நூல் உருவாக வெளிவராது நின்றது; திருத்தத்துக்கு வரும் 'புரூப்' திரு. நாயக்கர் அவர்களின் இல்லத்திலிருந்து கிடைத்தது. பா. வே. மா. அவர்களின் கைப்படத் திருத்திய அச்சுப் பிரதியை நமக்குத் தேடி உதவியவர் திரு. தா. ஏ. ஞானமூர்த்தி அவர்களாவர்.

முனியவே மாட்டீர். அன்றியும், நான் பேசவந்தது புளுகென்று உங்களுக்குத் தெரியுமாறுலும், என் புளுகிற்கு முன் புளுகாக, இளம் புளுகனுர், திருநாவிற் புளுகர் முதலிய அறிக்கைவிடுத்த மாணவர்கள் என் தாளாண்மையை எக்சிகூடிவ் எஞ்சினீர் (Executive Engineer[2]) ஓடு முடித்தவ னென்று புளுகியிருக்கிற படியால் என் புளுகு பின் புளுகாக ஏற்பீர்களாக.

**ஆராய்ச்சியின் தோற்றுவாய்**

*நாரணன் விளையாட் டெல்லா*
*நாரத முனிவன் கூற*
*ஆரணக் கவிதை செய்தான்*
*அறிந்த வான் மீகியென்பான்*
*சீரணி சோழ நாட்டுத்*
*திருவழுந் தூருள் வாழ்வோன்*
*காரணக் கொடையான் கம்பன்*
*தமிழினுற் கவிசெய் தானே*

என்று வான்மீகத்திருந்து கம்பன் கவி செய்தானெனப் பிறர் சொல்லி யிருத்தலானும்,

---

2 *1931-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 5-ம் நாள் வியாழக் கிழமை யன்று பல்லாவரம் பொதுநிலைக் கழகத்தின் இருபதாம் ஆண்டு நிறைவு விழாவில் திரு. பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள் நிகழ்த்திய பேருரையே இந்நூல். அக்கழகத்தின் அறிக்கையில் அக்கழகச் செயலாளர்களாகிய மணி. திருநாவுக்கரசு, இளவழகன் ஆகியோர் திரு. நாயக்கர் அவர்கள் 'எக்சிகூடிவ் எஞ்சினீ'ராக இருந்து ஓய்வு பெற்றவர் என்று குறிப்பிட்டிருந்தார்கள். ஆனுல் திரு. நாயக்கர் அவர்கள் 'சூப்பிரெண்டென்டிங் எஞ்சினீ'ராக வேலைபார்த்து ஓய்வு பெற்றவராவர். செயலாளர்கள் அறிக்கையில் தவருக வெளியிட்டதைத்தான் ஈண்டுத் திரு. நாயக்கர் அவர்கள் குறிப்பிடுகிருர். இங்குக் குறிப்பிட்டுள்ள இளம்புளுகனுர் கழகச் செயலாளர் இளவழகன் ஆவர். திருநாவிற் புளுகர்-மணி. திருநாவுக்கரசு.*

தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளும் முந்திய
நாவி ஞருரை யின்படி நான்தமிழ்ப்
பாவி ஞலி துணர்த்திய பண்பரோ

என்று அவ்வாறு வான்மீகத் திருந்து கம்பன்—'நொய்தின் நொய்ய சொல் நூற்ற' தாகக் கவிக் கூற்றே இருத்தலானும்,

..............அபிநவ கவிநாதன்
விழுந்த ஞாயிறு எழுவதன்
முன் மறைவேதிய ருடஞராய்ந்
தெழுந்த ஞாயிறு விழுவதன்
முன்கவி பாடின தெழுநூறே

என்று பிறர் சொல்லியிருத்தலானும் நமது கம்பன், தனக்கே—ஆரிய மொழிப்பயிற்சி இல்லாமலோ, அன்றி இருந்திருப்பினும், வேதியர் சொல்லே வேதச் சொல்லாகத் தன் தலையிற்றுங்கித் தனது நூலே ஆக்க எண்ணிய நோக்கத்தாலோ, மற்று அவ்வேதியருடன் ஆராய்ந்தே தனது இராமாயணத்தை யாத்தனன் என்றிருத்தலினுலும்,

"தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளும் முந்திய
நாவி ஞருரையின் படி"

தான் "தமிழ்ப் பாவினுல்" மொழி பெயர்த்ததென்று கம்பன் கூற்ருகவே இருத்தலாலும், கம்பன் நூலி

டையே அறியக்கிடக்கும் மக்கள் ஒழுகலாறு வட நாட்டு ஆரியமக்கள் ஒழுகலாற்றிற்குப் பல வகைகளில் மாறுபட்டதாகப் புலப்பட்டமையினுலும், நீலகிரி மலைமேல் ஆனந்தாஸ்ரமத்து அமர்ந்திருந்த–மஹரிஷி சிவத்யானனந்தர் வால்மீகத்திருந்து கம்பன் பிறழ்ந்ததை வற்புறுத்தி 1—3—1919-ல் ஒரு திருமுகம்[3] எனக்குக் கடைக்கணித்தபடியாலும் கம்பனுக்கு முதனூலாகிய வான்மீகத்துடன் ஒத்திட்டுப் பார்க்கும் அக்கறையும் ஊக்கமும் அடியேனுக்குத் தோன்றின.

### புளுகுக்குச் சக்கரவர்த்தி யார் என்பது

ஒத்திட்டுப் படிக்க எனக்குக் கிடைத்த சுவடிகள், இப்போது கம்பராமாயண மென்றும், வால்மீகி இராமாயண மென்றும் பெயரிட்டுப் பதிப்பிக்கப்

---

3 திரு. சிவத்யானனந்தர் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள கருத்தின் சுருக்கம் பின்வருமாறு:— "இங்குமங்கும் கதைப் போக்கில் சில மாறுதல்களைச் செய்திருப்பதற்காகமட்டும் கம்ப இராமாயணத்தை நான் பழிக்கவில்லை. அகலிகையின் தூய்மையை உணர்தற்கு மூல நூலாகிய வான்மீகத்தையே படிக்குமாறு என் வாசகர்களைத் தூண்டவேண்டும் என்பது என் நோக்கம். கம்பன் தன் பக்தி வெறியிலே அபத்தமான அளவுக்குப் போகிருன் என்பது எனக்குத் தெரியும்.........வில்லியைப் போல் இல்லாமல் கம்பன் ஒருதலைப் பட்சமாக நடந்திருக்கிருன்......... வான்மீகி இராமாயணம் எளிய அழகிய நடையில் அமைந்துள்ள கதை: மனித உணர்ச்சிகள் கோட்பாடுகள் ஆகியவை பற்றித் தன் மனம் போனபடியெல்லாம் இழுத்து நீட்டி, வான்மீகியின் தெளிந்த கதையை ஒரு நாடகமாக ஆக்கிவிட்டான். சூரிய குல மன்னரின் காலத்தை அறியக் கம்ப இராமாயணம் பயன்படாது. வான்மீகிதான் அவர்களின் ஒழுகலாறுகளையும் ஒழுக்கங்களையும் உள்ளபடி தருகிருர்."
இக் கருத்தை மனத்தில் கொண்டே திரு. நாயக்கரின் கட்டுரையைப் படிக்கவேண்டும். அவ்வாறு பயின்ருல், கட்டுரையின் நுண்பொருள் தெளிவாக விளங்கும்.

பெற்று உலவி வரும் கடைச் சுவடிகளேயாம். இவைகளைக் கொண்டுதான் கம்பன் பேரில் புளுகை யேற்றினேனாகையால், இக் கடைச் சுவடிகளே மூல பாடங்களுக்கு வேறுபடப் பதிப்பிக்கப் பெற்றிருக்கு மேல், கம்பன் புளுகு என்பது கடைச் சுவடிப் புளுகாக முடியும்.

அல்லது தமிழனாகிய கம்பன் "ஆரியம் என்றால் கேழ்வரகு" என்கிற வரையில் மாத்திரம் தெரிந்திருந் தானானால் அவனுக்கு வால்மீகி நூலை எடுத்தோதிய வேதியர்கள் புளுகியிருத்தல் வேண்டும். ஆனால், அக்காலத்து வேதியர்கள் புளுகர்கள் அல்லர் என்று யான் முழுதும் நம்பியிருத்தலினாலே புளுகென்று தோன்றிய முழுமையினையும் நம்மவன் கம்பன் புளுகென்றே யான் தீர்மானித்தேன். அவ்வளவு திறமையுடன் புளுகும் வன்மையும் புளுகுச் சக்கரவர்த்தியாகிய கம் பனையன்றி வேறு யார்க்கும் கிட்டக் கூடியதென்றும் யான் நம்பவில்லை.

### இருநூற்களின் வேற்றுமை

புலமையுடையோர் சங்க நூற்களை மிகவும் பாராட்டுதல் அவைகளுள் பொதிந்து பொலியும் இயற்கை நவிற்சி யணிகளை வியந்தன்றோ? அவ்வா றாயின் உலக இயற்கை நிகழ்ச்சிகள் அன்று எத்தகை

யனவோ இன்றும் அத்தகையனவாகவே நம் இரு விழிகள் காண நிகழ்வதெனத் தோன்றும் அழகுடன் நவின்று செல்வது வால்மீகம். அதற்கு முற்றிலும் மாருக, செயல் கடந்த செயற்கைக் கட்டென்றும் கம்பன் கனவென்றும் இயற்கை யுணர்வினர் எவரும் எண்ணும்படி நவின்று செல்வது கம்பன் நூற்ற நூல்.

### வால்மீகத்தில் உறுதிமொழி

மற்றைய புலவர்களைப் போன்று காலத்தால், சொல் வழக்கால், செவி வழக்கால், மாறி மாறிப் பிறழ் வடைந்து பின்வந் தெய்திய பாட்டிக் கதைகளைத் தங் கள் புலமைகொண்டு புனைந்தெழுதுபவர்கள் போன்ற வரல்லர் — வால்மீகி.

அவரோ கதைத் தலைவனாகிய இராமன் காலத் தவர்; கதைத் தலைவியாகிய சீதைக்குப் பிள்ளைப் பேறு பார்த்தவர். அவ்வாறு ஒரு காலத்தவராக நேர்ந்தமை போதாமலும், தமக்கு நேராகத் தெரிந்த நிகழ்ச்சிகளையும், மறதியால் மாறுபட வரைய இடமுண்டென்று அஞ்சி, நான்முகன் அருளாலும் நாரத மகா முனிவர் நெறிப்படுத்திய படியும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை, இருந்த இருப்புக்களை, அழுத அழுகைகளை, சிரித்த சிரிப்புக்களை அவ்வவ்வாறே வரைந்து வைத்தனராக வால்மீகமே கூறுகின்றது.

**வால்மீகம் — பாலகாண்டம்**

3-வது சர்க்கத்தில்

உள்ள சுலோகம் :

ராமலகஸ்ட்மண ஸீதாப்$^{2}$ஸ்ச
ராச்$^{2}$ஞா த$^{3}$ஸர த்ஸேநச,
ஸலப்$^{2}$ஸ்ஆர்யேண ஸரா ஸ்ட்ரேண
யத்ப் ராப்தம் தத்ர தத்த்வதஸ் 3

ஸஅ ஸ்விதம் ப்$^{3}$ஸ்ஆ ஸ்டிதம் சைவ
க$^{2}$ திர்வாயுச்ச சேஸ்ட்டிதம்,
தத் ஸர்வம் த்$^{2}$ஸ்அர்மவீர்யேண
யத் ஸ்ஆவத் ஸம் ப்ரப ஸ்யதி 4

அதாவது:

இராமன், இலக்குவன், சீதை, தசரதர், நாட்டார், நகரத்தார்களும் அவரவர்கள் சிரித்தது, பேசியது, செய்தது, வனவாசத்தில் நடந்தது முதலான சகலத்தையும் அருள் வலுவினுலே உண்மையாக அறிந்து வால்மீகி எழுதினு ரென்பது.

**கம்பன் புளுகின்மேற் புளுகனென்பது**

கம்பனே 'எண்ணிய சகாப்தம் எண்ணூற்றேழின் மேல்' - அதாவது இங்கிலீஷ் 885-ல் வாழ்ந்த முந்தா

நாளைய மனிதன். இன்றையோர் கம்பனைப் பதின் மூன்ருவது ஆழ்வாராக்கிஞ ராயினும் தன் காலத்தில்

*"நெற்கொண்டு போமளவும்*
*நில்லாய் நெடுஞ்சுவரே"*

என்று சோற்றிற்கு மண் சுவரெடுத்த வெறும் மனிதனே யன்றி வால்மீகியைப் போல—சிவத்யாஞனந்தரைப் போல—மஹரிஷியு மல்லன்.

ஆகலின் உடனிருந்து கண்டும் கேட்டும் அருள் பெற்றும் ஆய்ந்தும் வால்மீகி எழுதிய கதையை முதலிலிருந்து இறுதிகாறும் கம்பன் தன் நூலில் திரித்தும், கூட்டியும், குறைத்தும் புளுகிச் சென்றதையேனும் 'புளுகினேன்' என்று சொல்லிவிட்டிருப்பாஞனல் அந்தக் கூற்று வரையிலேனும் கம்பன் புளுகனல்லஞய்ப் போய்விடுதற் கஞ்சி — தான் புளுகவேயில்லை,

*"மூவரானவர் தம்முளு முந்திய*
*நாவிஞ ருரையின்படி"*

தான் செய்ததாகவும் உறுதிமொழி கூறிப் புளுகின் மேற் புளுகின னந்தோ!

**இரண்டு நூல்களிலும் பொதுப்பட உள்ளவை பெயரளவே யென்பது**

இராமன் சீதை இலக்குவன் தாரை இராவணன் முதலிய பெயர்களைப் பெயரளவிலும், இராமன் சீதை

இலக்குவன் மூவரும் காட்டிற்குப் போனார்கள் - இராமன் மனைவி சீதையை இராவணன் கொண்டோடிப் போனான் - இராமன் குரங்குக் கூட்டத்தோடு கடல்கடந்து சென்று இராவணனைக் கொன்று சீதையை மீட்டுவந்தான் என்பன போன்ற நிகழ்ச்சிகள் நிகழ்ச்சி யளவிலும் வால்மீகி நூலிற்கும் கம்பன் நூலிற்கும் பொதுப்படக் காணக் கிடக்கின்றனவே யன்றிச் சிறிது உற்று நோக்குங்கால் வால்மீக இராமன் வேறு, கம்ப இராமன் வேறு - வால்மீக சீதை வேறு, கம்ப சீதை வேறு - வால்மீக தாரை வேறு, கம்ப தாரை வேறு என்பனவும், கம்ப மண்டோதரியோ கம்பன் மண்டை யோட்டிற்குள்ளிருந்து பிறந்தவள் என்பதும் தெளிவாகும்.

கதை நிகழ்ச்சிகளிலும் வால்மீக நிகழ்ச்சிகளோ இயற்கைக்கு மாறாத வாய்மையெனத் தோன்றும் நிகழ்ச்சிகள். கம்ப நிகழ்ச்சிக ளென்றாலோ, இயற்கைக்கு வேறாய பெரும் பெரும் புளுகுகளென்று ஓரமின்றிய உள்ளப் பாங்கினருக்கு வெட்ட வெளியாகப் புலப்படக் கூடியனவும், கம்பன் கவித்துவ நறவம் மாந்தி மயங்கியோருக்கு

*"பொய்யுடை யொருவன் சொல்வன் மையினால்*
*மெய்போ லும்மே மெய்போ லும்மே"*

என்ற ஆன்றோர் சொற்படி கம்பனைப் பதின்மூன்றாவது ஆழ்வாராகத் தோற்றச் செய்யக் கூடியவனுமாய் அமையும் நிகழ்ச்சிகளாக இருக்கின்றன.

## கம்ப இராமனுடன் மூவர் மரவகையுணவே அருந்தின ரென்பது

முதற்கண் கம்பசூத்திர இராமனையும் வால்மீக இயற்கை இராமனையும் நெருங்க நிறுத்திப் பார்ப்போம்.

கம்ப இராமனே உயிர்செகாமையையே முதலொழுக்கமாகக் கொண்ட சைவ நாயன்மார்களுக்குப் பின் தென்னுட்டில் தோன்றி, பிறப்பில் எவ்வாறெனினும் ஒழுங்கில் சைவனுய்ப் போன இராமன். எவ்வாறெனின் :

### கங்கைப் படலத்தில்

நகர் நீங்கிக் கங்கையாற்றங்கரை வந்துற்ற கம்ப இராமனுக்கு ஆங்கு வதிந்த முனிவரர்கள்

*காயுங் கானிற் கிழங்குங் கனிகளும்*
*தூய தேடிக் கொணர்ந்தனர் தோன்றனீ*
*ஆய கங்கை யரும்புன லாடினை*
*தீயை யோம்பினை செய்யமு தென்றனர்.—15.*

ஆனல் கொடுவந்து கொடுத்தோர் முனிவரர்களாகையினுலே, அவர்கள் உண்ணும் மரவகை யுணவை யுதவினரென இதனுல் உணரத்தக்கதே யன்றி ஊனை உதவியிருந்தால் கம்ப இராமன் வேண்டாமென்றிருப்பானே என்பதற்குச் சான்ருகாதெனச் சொல்ல இடமுண்டு. ஆனல் அதே கங்கைப் படலத்தில்

குகனென்னும் பெயர் நாவாயான் மீன் காணிக்கையுடன் வந்து கம்ப இராமனைக் கண்டபோது,

*இருத்தியீண் டென்ன லோடு*
*மிருந்திலன் எல்லை நீத்த*
*அருத்தியன் தேனு மீனு*
*மமுதினுக் கமைவ தாகத்*
*திருத்தினென் கொணர்ந்தேன் என்கொல்*
*திருவுள மென்ன வீரன்*
*விருத்தமா தவரை நோக்கி*
*முறுவலன் விளம்ப லுற்ருன் —42.*

என்னென்று விளம்பலுற்ருன் ?

*அரியதாம் உவப்ப வுள்ளத்*
*தன்பினுல் அமைந்த காதல்*
*தெரிதரக் கொணர்ந்த வென்ருல்*
*அமிழ்தினுஞ் சீர்த்த வன்றே*
*பரிவினில் தழீஇய வென்னிற்*
*பவித்திர எம்ம ஞேர்க்கும்*
*உரியன இனிதி னுமும்*
*உண்டனெ மன்ருே வென்ருன். —43.*

அதாவது மீனுனை வாயாலுண்ணுமல் உள்ளத்தாலுண்டா னென்ப.

இதனுலும்கூடக் கம்ப இராமன் ஊனுணுதவனென்று கோடற்குப் போதாது; முனிவர்கள் முன்னிலையில் ஊனுண்ணக் கூசினுனென்று எண்ணற்கிட னுண்டு.

ஆனல் குகப்படலத்தில் (பிறன் கூற்ருக, என்னே?) பரதன் கூற்ருக,

*இயன்றதென் பொருட்டி னுலிவ்*
*விடனருக் கென்ற போழ்தும்*
*அயின்றனே கிழங்குங் காயும்*
*அமிர்தென வரிய புல்லில்*
*துயின்றனே யெனவும் ஆவி*
*துறந்திலென் சுடருங் காசு*
*குயின்றுயர் மகுடஞ் சூடும்*
*செல்வமுங் கொள்வன் யானே. —40*

என்னும் செய்யுள் காணப்படுகிறது.

இங்கே கம்ப இராமன் கிழங்குங் காயும் உண்டு வந்ததாக இருக்கிறது. ஆனல் பரதனுக்குக் கேள்வி யால் தெரிந்ததே யன்றி நேராகத் தெரிந்த தன்ருகலின் கேள்விச் சான்று சான்ருகாது (Heresay evidence is no evidence) என்று கொள்ளற் கிடனுண்டு.

இன்னும் அணுக்கத்தனுன இலக்குவன் கூற்றைக் கேட்போம்.

கிட்கிந்தைப் படலத்தில் வருவலென்று உறுதிகூறிச் சென்று மதுவுண்டு வெறிகொண்டு காலந்தாழ்த்திய சுக்ரீவனே யழைக்கச் சீற்றமேற்கொண்டு சென்ற ணேந்த இலக்குவனுக்குத் தன் நினேவு வரப் பெற்ற சுக்கிரீவன் தான் நுகர்வகை யுணவு அளித்தனன். அப்போது இலக்குவன்,

*"பச்சிலை கிழங்கு காய் பரமனுங்கிய*
*மிச்சிலே நுகர்வது வேறுநா னென்று*
*நச்சிலேன் நச்சினே னாயினு முண்ட*
*எச்சிலே யதுவிதற் கேது வில்லையால்" —114*

என்றும்,

*"அன்றியு மொன்றுள தைய யானினிச்*
*சென்றனென் கொணர்ந்திடை திருத்தி னுலது*
*நுன்துணைக் கோமகன் நுகர்வ தாதலால்*
*இன்றிறை தாழ்த்தலும் இனிதன்றும் என்றான்" —115*

இக்கூற்றுகளில் மரவகை யுணவே இராம இலக்குவர் காட்டிலருந்தின ரென்பதே மேலும் மேலும் வற்புறுத்தப்பட் டிருக்கிறது.

**பண்டைய ஆரிய ஒழுக்கம் ஊன்தின்ப தென்பது**

உண்மையில் வால்மீகி காலத்தில் வடநாட்டில் ஆரிய வகுப்பின் நால்வகைச் சாதியாரும், தாங்கள் ஊன்தின்னும் வழக்கத்தினர் மாத்திர மல்ல, தென் புலத்தார் (பிதுரர்கள்) களுக்கும் ஊன்வைத்துப் படைக்கும் வழக்கத்தினர் என்பதும், ப்ராஹ்மணர் முதலாயினோர் இன்னின்ன ஊன் தின்னலாம், இன்னின்ன தின்னலாகா தென்பதும், தென்புலத்தாருக்கு எந்தெந்த ஊன் அவி கொடுத்தால் எத்தனை யெத்தனை ஆண்டுகளுக்கு அவர்களுக்கு ஆறுதலுண்டு என்பதும் போன்ற

விவரங்கள் மனுஸ்மிருதி முதலிய நூல்களில் சொல்லி யிருப்பது நுங்கட்குத் தெரியுமன்றோ ? அன்றியும் இராமன் ப்ராஹ்மணனு மல்லன். அக்காலத்திலும் இக்காலத்திலும் பிற்காலத்திலும் ஊன் தின்ற, தின்கிற, தின்னும் க்ஷத்திரிய னல்லனோ ?

வெள்ளக் கணக்கான அரக்கர் படைகளைக் கொல்லப் போன இராம இலக்குவர் மரவகை யுணவு உண்டனர் என்று கம்பன் புளுகுவானேன் ? ஓரிடத்திற் புளுகியதா ? அல்ல.

"பொய் சொல்லின் பொருந்தச் சொல்" என்னும் வழக்கிற்கு ஏற்ப யான் முன்எடுத்துக் காட்டியவாறு புளுகத் துவக்கிய கம்பன் தன் இராமாயணமெட்டிலும் பொருந்தப் புளுகிக்கொண்டு போகின்றனனு ? அல்லது,

"மூவரானவர் தம்முளு முந்திய நாவினுருரையின்படி" சொல்லிப் போகின்றனனு, நீங்களே பாருங்கள்.

### இராமன் ஊன் தின்பதில் ஊக்கமுடையவனென வால்மீகி வாய்மை மொழி

வால்மீகியோ உள்ளதை உள்ளபடியும் உணர்ந்ததை உணர்ந்தபடியும் கூறும் வாய்மையுடையவர். அதனுற்றான் இயற்கை நவிற்சி அவர் நூலில் பொலிகின்றது.

அயோத்யா காண்டத்தில் 20-வது சர்க்கத்தில் காட்டிற்குப் போம்படி கைகேசியால் ஏவப்பட்ட இராமன், நேர்ந்தது இன்னும் உணராதிருந்த தன் அன்னை கோசலையிடம் சென்று உற்றது உணர்த்தியபடி :

சதுர்த³ஶ ஹிவர்ஷிடாணிவத்
ஸ்யாமி விஜநேவநே.
மத்⁴ஹுமூலபலைர்ஜீ³ வன்
ஹித்வாமுநிவத்³ ஆமிஷம்.
ப்³ஹரதாய ம ஹாரா
ஜோ³ யௌவராஜ்³யம் ப்ரயச்ச²தி

அதாவது 'அன்னாய்! மக்களின்றிய காட்டில் பதினான்கு ஆண்டுகள் வதியப் போகின்றேன்; துற வியைப் போல ஊனைவிட்டு, தேன் வேர் கனிகளால் உயிர்வகித் திருக்க வேண்டியவன். பேரரையர் (தசர தர்) இளவரசுப் பட்டத்தைப் பரதனுக்குக் கொடுத்து விட்டார்' என்று இராமன் கூறினான்.

இக்கூற்றிலும், இளவரசுப் பட்டம் போனதை முதலில் சொல்லாமல், காட்டில் வதிய வேண்டியதை யும் ஊன் தின்பது போனதென்பதையும் முன்னர் மொழிந்தபடியால் இராமனுக்கு இளவரசுப் பட்டம் போனதைவிட ஊன் தின்பது போனது பெரிதாக உறுத்திற்றென்று வெறுங்குறும்பினர் பழிப்பர். அஃ தன்று. தனக்குற்ற இடுக்கணைத் தாய்க்குணர்த்த வந்த

இராமன், இடி வீழ்த்துவது போல எடுத்த எடுப்பில் இளவரசுப் பட்டம் போயிற்றென்ருல் அத்தாய் எவ்வளவு வருந்துவள்! அவ்வாறு திடுக்கென்று வருத்தம் தோன்ருதபடி, காட்டிற்குத் தான் போவதை முன் சொல்லி, காட்டில் மக்களின்றிய தன்மையைப் பின்னுணர்த்தி, துறவிகள் போல ஊன் மறுக்கவேண்டியதை அதன்பின் உணர்த்தி, வேறு யார்க்குமல்ல அடுத்த மகனுகிய பரதனுக்கென்று துவக்கி மகாராசா என்று தொடர்ந்து, எதுபற்றி யென்றெழும் ஐயப்பாட்டை யுண்டாக்கி அதன்பின் இளவரசுப் பட்டத்தைப் பற்றி யென்றுணர்த்தி இறுதியில் கொடுத்து விட்டார் என்று கோசலை மனத்தை வருத்தமேற்கும் வண்ணம் சிறுகச் சிறுகப் பண்படுத்தி மொழிந்த அருமை யழகு வால்மீகியின் கவித்திறத்தையும் வாய்மையையும் காட்டும்.

ஆனுல் ஊன் தின்பதை ஒழிக்கவேண்டியதாகக் கோசலை மனத்தைப் பண்படுத்த வேண்டிக் கூறியதேயன்றி, உள்ளபடி ஊன்தின்பதை இராமன் முதலிய மூவர் நீக்கினரென்று வால்மீகி புளுகினு ரல்லர்.

நாட்டிற் கிடைக்கும் ஊனைவிடக் காட்டிற் கிடைக்கும் ஊன்தான் பல்வேறு வகையதென்றும் நோயற்ற தென்றும், சுவையுற்ற தென்றும் தரையிற் படர்ந்து கிடக்கும் உப்பும், உதிர்ந்து கிடக்கும் சருகும், நெருப்புண்டாக்கக் காடெங்கும் கிடைக்கும்

சக்கிமுக்கிக் கல்லும் கொண்டு, அடுவதற்குப் பாண் டங்களும் வேண்டாமல், இப்பெருங்குழுவிற்கு வந் துறைவோர் நாளொன்றிற்குச் செலுத்த வேண்டிய சிறு தொகை ஒரு ரூபாயும் வேண்டாமல், நெருப்பில் வாட்டி வயிறுரத் தின்னக் கூடியதென்றும் வேடரா யிருந்து நன்குணர்ந்து, பின் மகரிஷியான வால்மீகி தெரியாதவ ரல்லர்.

வெள்ளக்கணக்கான அரக்கர்களைக் கொல்லச் செல்லுமிவர்கள் ஆட்டு மாட்டுத் தீனிதின்று சென்று ஆற்றக்கூடியது மல்லவென்றும் வால்மீகி யுணராதார் அல்லர். நாடுவிட்டுக் காடுபுகுந்த முதல் நாள் உணவிற்கு இராமன் முதலிய மூவர் என்ன செய்தார்க ளென்பது பற்றி வால்மீகி வாய்மை புகல்கின்ருர்.

**வால்மீகம் — அயோத்யா காண்டம்**

52-வது சர்க்கம்

ஸ்லோகம்

தௌ தத்ர ஹத்வா சதுரோ மஹாம்ருகாந்
வராஹம் ருச்யம் ப்ருஷதம் மஹாருரும்
ஆதாய மேத்யம் த்வரிதம் புபுக்ஷிதௌ
வாஸாய காலே யயதுர்வநஸ்பதிம்

அதாவது :

அவர்கள் அவ்விடத்தில் பன்றி, கலைமான், புள்ளி மான், கறுப்புக் கலைமான் ஆகிய நான்கு பெரிய

விலங்குகளைக் கொன்று, சிறந்த அவைகளை எடுத்துக் கொண்டு உண்ண விரும்பியவர்களாய் விரைவாகக் காலத்தில் காட்டரசாய் நிற்கும் ஆலமரத்தினடிக்குச் சென்றார்கள்.

அவ்வாறு கூறுவதிலும் வால்மீகி ஊன்திறம் உணர்ந்தவ ராகையினாலே, மிகுதியாக வபையை (வயிற்றடிக் கொழுப்பு) உடையதும், வாட்டிய ஊன் வெண்ணெய் போன்று வாயிற் கரையும் மென்மை யுடையது மாகிய பன்றியை (வராகம்) முதற்கண்ணும், அடுத்தபடியான கலைமானை (ருஷ்யம்) அதன்பின்னும், தசையை உலர வைத்துப் பின்னுண்ணக் கூடியதும் தாழ்வாய்த் தசைநார்களுக்குப் பயிற்சி கொடுப்பது மாகிய புள்ளிமான் (ப்ருஷ்தம்) கறுப்புக் கலைமான் (மஹாருரும்) களை அதன்பின்னும் முறையே வைத்துக் கூறினா ரென்க. ஆனால் அவ்வழகு நுங்கட்குத் தெரி யவே தெரியா தென்பது சொல்லவேண்டுமோ?

அன்றியும் உள்ளுறைப் பொருள் அழகும் வைத்துக் கூறினா ரென்னலாம். ஏற்றெனின் முன் அவதாரமாகிய வராகத்தைச் சுட்டி இராமனையும், கண்ணழகிய கலைமானைச் சுட்டிச் சீதையையும், புள்ளிமானைச் சுட்டி மயக்க வந்த மாரீசனையும், கறுப்புக் கலைமானைச் சுட்டிக் கரிய இராவணனையும் குறித்தா ரென்று கொள்ளவும் அமையும்.

கம்பன் புளுகியது முழுக் குற்றமானால் அதிற் பாதியாவது உங்கள் சைவப் பரம்பரைக் குண்டு.

அதாவது அவன் புளுக ஊக்கிய குற்றம் (Abetting) உங்களுடையது. ஏனெனில் கம்பன் காலத்தில் மிதந்து பரவியிருந்த நுங்கள் பரம்பரையார் கம்பன் நூலைப் படித்து வாய் புண்ணுகாதபடி, கேட்டுச் செவி புண்ணுகாதபடி, நினைத்து மனம் புண்ணுகாத படி இராமனையே கம்பன் சைவனுகப் புளுகி யிருத்தல் கூடும். உங்களுக் கினிக்கப் பொய்யுரை கம்பன் புகன்றதை "பொய்மையும் வாய்மை யிடத்த புரை தீர்ந்த நன்மை பயக்கு மெனின்" என்று "போற்ற வும் போற்றுவீர்" — அதைக் குற்றமென் றெடுத் தியம்பும் என்னைத் "தூற்றவும் தூற்றுவீர்".

ஆனாலும் உங்கள் இறைவன் சீற்றத்திற்கும் அஞ்சாத தமிழர் வழித்தோன்றிய யான் உங்கள் சீற்றத்திற்கும் அஞ்சாது, கம்பன் புளுகியது "குற்றம் குற்றமே" என்பேன்.

அவன் பொய்மை நன்மை பயப்பதற்கு மாருக அளவற்ற தீமை பயந்த தென்று கண்கூடு படுத்த வேண்டிய சான்றுக ளுண்டு.

**கம்பராமன் அசாத்திய குண ராமனுகக் கம்பனுல் புளுகப் பெற்ரு னென்பது**

ஊன் தின்டி ராமனைக் கம்பன் சைவ ராமனுக் கியது மாத்திரமா?

வால்மீகி வாய்மை தவருது வரைந்த இயற்கைக் குணங்களுடையவனு யிருந்த சாத்திய ராமனைக்

கம்பன் புளுகில் செயற்கை யெல்லையையும் கடந்த அசாத்திய ராமனுக்கினன்.

எடுத்துக் காட்டுகள் இரண்டொன்று இயம்பல் சாலும்.

**கைகேசி சூழ்வினைப் படலத்தில்**

முடி சூடுவதற்கென வந்துகொண் டிருந்த இராமன்முன் கைகேசி தோன்றி,

*ஆழிசூ ழுலக மெல்லாம்*
*பரதனே யாள நீபோய்த்*
*தாழிருஞ் சடைகள் தாங்கித்*
*தாங்கருந் தவமேற் கொண்டு*
*பூழிவெங் கான நண்ணிப்*
*புண்ணியத் துறைக ளாடி*
*ஏழிரண் டாண்டின் வாவென்*
*றியம்பின னரச னென்ருள். —107*

அடுத்த ஓரையில் நாடாள்வோமென வரும் இயற்கை ராமனுக்குத் திடுக்கென்று பதினுன்கு ஆண்டுகள் காடாளப் போவென்று சொன்னது மாத்திர மல்ல, தரையில் விழும்படியான சடைகள் தாங்கவேண்டிய தென்றும், அணித்தில் கடிமணம் புரிந்த இளங்காளே, தவம் மேற்கொள்ள வேண்டிய தென்றும், இன்ன பிறவுமான கொடுங் கடுங் கட்டளேகளேக் காதிற் கேட்ட கம்பராமன் எவ்வா றிருந்தானெனக் கம்பன் பச்சைப் புளுகு புளுகுவது யாதெனின்,

## கைகேசி சூழ்வினைப் படலத்தில்

இப்பொழு தெம்ம ஞேரா
லியம்புதற் கெளிதோ யாரும்
செப்பருங் குணத்தி ராமன்
திருமுகச் செவ்வி நோக்கில்
ஒப்பதே முன்பு பின்பவ்
வாசக முணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா
மரையினை வென்ற தம்மா. —108

தெருளுடை மனத்து மன்னன்
ஏவலிற் றிறம்ப வஞ்சி
இருளுடை யுலகந் தாங்கு
மின்னலுக் கியைந்து நின்முன்
உருளுடைச் சகடம் பூண்ட
வுடையவ னுய்த்த காரே(று)
அருளுடை யொருவ னீக்க
வப்பிணி யவிழ்ந்த தொத்தான். —109

மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்ப ஞேவென்
பின்னவன் பெற்ற செல்வ
மடியனேன் பெற்ற தன்றே
என்னிதின் யுறுதி யப்பா
லிப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னெளிர் கான மின்றே
போகின்றேன் விடையுங் கொண்டேன்.
—110

என்று கம்பன் புளுகி லுதித்த அசாத்திய ராமன் "அப் பொழு தலர்ந்த செந்தாமரை முகத்துடன்" விடை கொண்டு சென்றானும். அம்மட்டு மன்று; கம்பராம னும் கம்ப கோசலையும் அளவளாவிய பெரும் புளுகை யும் கேளுங்கள்.

### நகர் நீங்கு படலத்தில்

கம்ப ராமன், கோசலை கோயிலில்

*குழைக்கின்ற கவரி யின்றிக்*
*கொற்றவெண் குடையு மின்றி*
*இழைக்கின்ற விதிமுன் செல்லத்*
*தருமம்பின் னிரங்கி யேக*
*மழைக்குன்ற மனையான் மௌலி*
*கவித்தனன் வருமென் றென்று*
*தழைக்கின்ற வுள்ளத் தன்னாள்*
*முன்னொரு தமியன் சென்றான்.* —2

அது கண்டு கம்ப கோசலை :—

*புனைந்திலன் மௌலி குஞ்சி*
*மஞ்சனப் புனித நீரால்*
*நனைந்திலன் என்கொல் என்னு*
*மையத்தாள் நளின பாதம்*
*வனைந்தபொற் கழற்கால் வீரன்*
*வணங்கலுங் குழைந்து வாழ்த்தி*
*நினைந்ததென் னிடையூ றுண்டோ*
*நெடுமுடி புனைதற் கென்றாள்.* —3

அதாவது அப்போ தலர்ந்த ராமத் தாமரையை இள ஞாயிற்றின் கதிர்கள் பனிநீர் கலந்து தாவக் குளிர்ந்த கோசலைத் தாமரை கேட்டனளாம்.

கோசல

*"மங்கை யம்மொழி கூறலும்"*

கம்பராம

*...................................."மானவன்*
*செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்*
*பங்க மில்குணத் தெம்பி பரதனே*
*துங்க மாமுடி சூடுகின்றா னென்றான்" —4*

அதுகேட்ட குளிர்தாமரைக் கம்ப கோசலை,

*"முறைமை யன்றென்ப தொன்றுண்ட தல்லது*
*நிறைகு ணத்தவ னின்னினு நல்லனால்*
*குறைவி லன்னெனக் கூறினள் நால்வர்க்கும்*
*மறுவி லன்பினில் வேற்றுமை மாற்றினாள்" —5*

**ராமன், கோசலை இயற்கை யுணர்ச்சிகளை வால்மீகி**

**உள்ளதுள்ளபடி நவிலுகின்றா ரெனல்**

கம்பன் புளுகு இவ்வாறாக, "மூவரானவர் தம்முளு முந்திய நாவினர்" வாய்மையே கூறும் வால்மீகி சொல்லுவது கேளுங்கள்.

"இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்" வால்மீகியின் மாண்பு;[1] "செயற்கைப் பொருளை ஆக்கமின்றிக் கூறல் கம்ப"[2] சூத்திரம்.

**வால்மீகம் — அயோத்தியா காண்டம்**
**20-வது சர்க்கம்.**

வால்மீக ராமன் கோசலையைக் கண்டு சொல்லுதல்:

ஸ்லோகம்:

ப்ரஸ்திதோ தண்டகாரண்ய
மாப்ரஷ்டு முபசக்ரமே
தேவிநூநம் நஜாநீஷே
மஹத்பயமுபஸ்திதம்

அதாவது வால்மீக ராமன் தண்டகாரண்யத்திற்குப் புறப்பட்டவனுய்க் (கோசலையைப் பார்த்துச்) சொல்லத் தொடங்கினன்:—

புகழ் வாய்ந்தவளே, மஹத்பய முபஸ்திதம்—

1. தொல்காப்பியம்-சொல் சூ. 19.
பொருள்:- இயற்கைப் பொருளை இத்தன்மைத்து எனச் சொல்ல வேண்டும். உதாரணம்:- நிலம் வலிது; நிலம் வலிதாயிற்று என்று கூறலாகாது.

2. 'செயற்கைப் பொருளை யாக்கமொடு கூறல்' —தொல்-சொல் சூ. 20.
பொருள்:- செயற்கைப் பொருளை ஆக்கச் சொல்லோடு சேர்த்துக் கூறல் வேண்டும். உதாரணம்:- நூல் ஆடையாயிற்று என்று கூறல் வேண்டும். ஆனுல் கம்பன் ஆக்கச் சொல்லோடு கூறவேண்டிய செயற்கைப் பொருள்களை இயற்கைப் பொருள் போல ஆக்கமில்லாமல் கூறியுள்ளான் என்கிறுர் ஆசிரியர்.

பெரிதான துணுக்க மூலம் நேர்ந்திருப்பது — நிச்சய மாக நீ அறியவே இல்லை.

**இத³ம் தவச து³:கா²ய**
**வைதே³ஹ்யா லக்ஷ்மணஸ்ய ச.**
**க³மிஷ்யே த³ண்டகாரண்யம்**
**கிமநேநாஸநேந மே**

அதாவது,

மனையொன்றில் உட்காரும்படி சொன்ன கோசலையை நோக்கி வால்மீக ராமன் சொல்லு கின்றான் :—

'இதனால் உனக்கும், சீதைக்கும், இலக்குவனுக் கும் துக்க ஆதாரமாக நான் தண்டகாரண்யம் போகப் போகின்றேன்; எனக்கு இந்த ஆசனம் என்னத்திற்கு?'

இன்னும் வால்மீக ராமன் கூறுவதைக் கேளுங் கள். அப்போ தலர்ந்த தாமரை கூறுவதா அல்லது வெம்பி யுதிர்ந்த தாமரை கூறுவதா என்பதை நீங் களே தெரிந்து கொள்ளுங்கள்.

வெம்பி யுதிர்வதுதான் இயற்கை யிலக்கண மாகையால் வால்மீகி நவில்வதே வாய்மை :—

விஷ்டராஸந யோக்³யோ ஹி
காலோ உயம் மாமுபஸ்தித:
சதுர்த³ச ஹி வர்ஷாணி
வத்ஸ்யாமி விஜநே வநே

அதாவது — 'அன்னாய்! தருப்பை மணைக்கு உரியதான இந்த வேளை என்னை நெருங்கி விட்டது. மக்களில்லாத காட்டி லல்லவா பதினான்கு ஆண்டுகள் நான் இருக்கப் போகிறேன்?'

இன்னும்

க்ஷௌத்³ர மூலபலைர் ஜீவந் ஹித்வா
முநிவதா³மிஷம்
ப⁴ரதாய மஹாராஜோ
யௌவராஜ்யம் ப்ரயச்ச²தி

அதாவது — 'அன்னாய்! துறவியைப் போல ஊனைவிட்டு, தேன், வேர், கனிகள் (ஆகிய இவைகளால் யான்) உயிர் வகித்திருக்க வேண்டியவன். பேரரையர் (தசரதர்) இளவரசுப் பட்டத்தைப் பரதனுக்குக் கொடுக்கிறார்'.

இன்னும்

**மாம்புநர் த³ண்ட³காரண்யே**
**விவாஸயதி தாபஸம்**
**ஷட்சாஷ்டௌ ச வர்ஷாணி**
**வத்ஸ்யாமி விஜ²நேவநே**

அதாவது — 'அன்னாய்! என்னையோ வென்றால் தண்டகாரண்யத்தில் துறவியாக வாழ அனுப்புகிறார். அந்த மக்களில்லாக் காட்டில் நான் ஆறும் எட்டும் பதினான்கு ஆண்டுகள் வாழப் போகிறேன்'. என்று வால்மீக ராமன் சொன்னான். இவ்வுணர்ச்சிகள்தான் முற்றிலும் இயற்கை யுணர்ச்சிகளாக, கம்பராமன் உணர்ச்சி உண்மையா என்பதையும் கம்பன் கூறியது முற்றிலும் புளுகல்லவா என்பதையும் நீங்களே ஆராய்ந்து கொள்ளுங்கள்.

மற்றும் "நிறை குணத்தவன் நின்னினு நல்லனால் குறைவிலன்" என்று பரதனை வாழ்த்திய கம்ப கோசலையுடன் வாய்மையிற் சிறந்த வால்மீக கோசலையை ஒப்பிட்டுப் பாருங்கள்.

மகாராஜா பரதனுக்கு இளவரசு கொடுக்கிறார் என்று கேட்ட கோசலை,

## வால்மீகம் — அயோத்தியா காண்டம்

## 20-வது சர்க்கம்

ஸ்லோகம் :

ஆலேவ மானோ வங்யாங்
ப்அலமூலே ச்ச வர்தயங்
லாநிக்ருதைவ லால ல்ய
யட்டிப் பர சுநாவநே
பபாத லஅலா தே³வீ
தே³வ தேவ தீ³வ ச்ச்யுதா

அதாவது காட்டிலுள்ள வேர், கனி, முதலானவை களைக் கொண்டு வாழப் போகின்றேனென்று வால்மீக ராமன் கூறக் கேட்ட அவள் (கோசலை) காட்டிடத்தில் கோடாரியால் வெட்டப் பட்ட ஆல மரத்துக் கிளைபோலவும் தெய்வ உலகத்திலிருந்து இவ்வுலகத் தரைமீது விழுந்த தெய்வப் பெண் போல வும் திடீரென்று நிலத்தில் விழுந்தாள்.

இவ்வாறு விழுந்து சாய்ந்த வால்மீக கோசலை யும், "நிறை குணத்தவன் நின்னினும் நல்லலால், குறைவிலன்" என்று பரதனை வாழ்த்திய கம்ப கோசலையும் ஒருவரேயோ? வேறு வேறோ கருதிப் பாருங்கள். கம்பன் கூற்றுப் பச்சைப் புளுகல்லவா, பேரறிஞர்களே சொல்லுங்கள்—அவ்வாறு ஏன் புளுக

வேண்டும்—வால்மீக கோசலைதான் இயற்கைக் குணத் தவ ளென்பதற்கும் வால்மீகி வாய்மை யுடையவ ரென்பதற்கும் என்னுடன் ஒப்புவீர்க ளன்றோ?

கோசலையிடம் விடைபெற வந்த வால்மீக ராம னுக்குப் பட்ட மிழந்ததும் காடு செல்வது ஆகிய செய்திகள் சொல்லளவி லிருந்த நிலையில் உணர்ந்த உணர்ச்சியினை அளவறிந்து கூறிய வால்மீகியின் உண்மைப் பண்பு மெச்சத் தக்கது. அதற்கடுத்தபடி வால்மீக ராமன் முதலிய மூவரும் கால் கடுக்க நடந்து காட்டிடைச் சென்று சருகெரித்து வாட்டிய ஊன் தின்று மென் மலரமளிக்குப் பதிலாகக் கட்டாந் தரையிற் சருகு பரப்பிப் பள்ளி கொள்ளும் முதனாள் முன்னிரவில் அன்றுவரை நுகர்ந்த இன்பத்திற்கும், அன்றிரவு நுகரும் துன்பத்திற்கும் வேற்றுமை அள விகந்து புலப்படு மன்றோ? அதன்பின் நாளடைவில் காட்டு வாழ்க்கையில் பழகப் பழக இன்ப துன்ப வேற்றுமையும் குறைந்து தோன்று மன்றோ? ஆக லின் சோகரசம் கோபரசம் என்று சொல்லப்படும் ரசங்களைக் காட்டுவதற்கு மகா கவியாகிய வால்மீகி முதல் நாளிரவில் வால்மீக ராமன் உணர்ந்த இயற்கை உணர்ச்சியை இப்போது நாம் எதிரிருந்து காண்பது போல புலப்படும்படி மிகவும் அழகாக, நீண்ட சருக்க மாக யாத்து வைத்தனர். அதில் சில சுலோகங்களை மாத்திரம் இங்கே சொல்லுகின்றேன்.

**வால்மீகம் — அயோத்யா காண்டம்**
**53-வது சர்க்கம்**

ஸ்லோகம் :

**த்[2]ருவமத்[2]யமஹாரா சே[2]ா**
**து[2]க்கஸம்ஹல்வபிதிலக்ஷ்மண**
**க்ருதகாமாது கைகேயீ**
**துஷ்டாப்[2]அவிது மர்ஹதி**

அதாவது

வால்மீக ராமன் மனக் காட்சியால் சொல்வது: 'ஓ இலக்குமணு! இப்போது தசரத மகாராஜா மிகுந்த துயரத்துடன் படுத்துக்கொண் டிருக்கிறார். கைகேயியோ வென்றால் தன் விருப்பத்தை நிறை வேற்றிக் கொண்டு மகிழ்வடைந்தவளாய் இருப்ப தற்கு உரியவள்.'

**ஸாஹிதே[2]வீமஹாராசகங்**
**கைகேயி ராச்[2]ய காரணுத்,**
**அபிநச்யா வயேத் ப்ராணுந்**
**த்[2]ருஷ்ட்வா ப்[2]அரதமாக[2]தம்**

அதாவது

'அந்தத் தேவியாகிய கைகேயி அரசாட்சியடைய வேண்டியதன் பொருட்டு வந்த பரதனைப் பார்த்துத் தசரத மகாராஜா தன் உயிரை விடும்படி செய்ய மாட்டாளா என்ன?'

இன்னும்

அநாத²ஸ்ச வ்ருத்³த⁴ஸ்ச
மயாசைவ விநாக்ருத
கிம்கரிஷ்யதி காமாத்மா
கைகேயீவஸ²மாக³த:

அதாவது

'உதவியற்றவனும், கிழவனும், (தலைமகனாகிய) என்னாலும் பிரிவுபட்டவனும், காமத்தி லமிழ்ந்தோனும், கைகேயியின் கையிற் சிக்கியவனும் ஆகிய தசரதன் என்ன செய்யப் போகிறான்?'

இன்னும்

இத³ம் வ்யஸநமாலோக்ய
ராஜ்ஞஸ்ச மதிவிப்⁴ரமம்
காமஏவார்த²த⁴ர்மாப்⁴யாம்
க³ரீயாநிதி மேமதி:

அதாவது

'இந்தத் துயரத்தையும், அரசனுடைய (தசரதனுடைய), அறிவுகெட்ட மருட்சியையும் பார்க்கிறபோது, அறம், பொரு ளிரண்டையும் விட இன்பமே பெரிதென்பது என்னுடைய கருத்து.'

இன்னும்

கோ(யவித்[2] வாஙபி புமாங்
ப்ரமத[2]ாயா(க்க்ருதேத்யசே[2]த்
ச்(அந்த[2]ாநுவர்திநம் புத்ரம்
தாதோமாமிவ லக்(ட் மண(

அதாவது

'ஓ இலக்குமணு! படிப்பில்லாதவனுங்கூட மனுஷனென்கிற ஒருவன் எவன்தான், பெண் பொருட்டாக விருப்பத்தைப் பின்பற்றுகின்ற புதல்வனுகிய என்னை என் அப்பனைப் போல விட்டு விடுவான்?'

இன்னும்

(வக்(இப[2]த(லப்[2](ஆர்ய(ர்ச
ப்[2](அரத(க்கைகயி(வத(,
முதி[2]தாங்கோசலா நேகோயோ
ப்[2](ஒக்(ட்யத் யத்[2](இராச[2]வத்

அதாவது

'எவன் செழித்திருக்கின்ற கோசல நாடுகளை ஒருவனுகவே அரசர்க் கரசன் போல நுகரப் போகின்ருனே அவன்தான் மனைவியுடன் கூடியவனும் கைகேயியின் மகனுமாகிய இன்பமுற்ற பரதன். — இது வியப்பே.'

இன்னும்

ஸஹி ஸர்வஸ்ய ராஜ்²யஸ்ய
முக்²யமேகம் ப⁴விஷ்யதி
தாதேச வயஸாதீதே
மயிசாரண்மாஸ்தி²தே

அதாவது

'அந்தப் பரதனே, அப்பன் முதுமை யடையவும், நான் காட்டை யடையவும், எல்லா நாடுகளுக்கும் ஒரே முதல்வனுக ஆகப் போகிறுன்.'

இன்னும்

அர்த²த⁴ர்மௌ பரித்யஜ்ய
ய: காமமனுவர்த்ததே
ஏவமாபத்³யதே க்ஷிப்ரம்ராஜா
த³ஶரதோ² யதா²

அதாவது

'எவன் அறம், பொருள்களைக் கைவிட்டு, இன்பத்தைக் கடைப் பிடிக்கிருனே அவன் தசரத அரசனைப் போல விரைவில் இம்மாதிரி துயரத்தை அடைவான்.'

இன்னும்

மங்யே த்²ஸரத் ஆந்தாய
மமப்ரவ்ராஸ² நாயஸ
கைகேயீ ஸௌம்ய ஸம்ப்ராப்தா
ராச்²யாய ப்²அரத ஸ்யஸ

அதாவது

'திங்களைப் போன்ற (அழகிய) இலக்குமணா! தசரதனுடைய முடிவிற்காகவும், நான் நாட்டை விட்டுப் போகிறதற்காகவும், பரதன் அரசாட்சி யடையும் பொருட்டும், கைகேயி யானவள் தோன்றி னாள் (என்று) நான் நினைக்கின்றேன்.

இன்னும்

அபீத்²ாநீம் நகை கேயீ
ஸௌப்²ஆக்யமத்²மோஹிதா
கௌஸல்யாஞ்ச ஸுமித்ராஞ்ச
ஸம்ப்ரப²ாத்²ஏத மத்க்ருதே

அதாவது

'இப்பொழுது செல்வக் கொழுப்பினாலே மயங்கி யிருக்கிற கைகேயி யானவள் என் பொருட்டாகக் கோசலையையும், சுமத்திரையையும் துன்புறுத்த மாட்டாளா?'

இன்னும்

**க்ருத்ர கர்மாஇ கைகேயீ**
**த்2வேட்ய மங்யாய்ய மாசரேத்,**
**பரித2த்2யாஇத்3அர்ச்மச்2ஞே**
**ப்2அரதே மமமாதரம்.**

அதாவது

'தீய வொழுக்கமுடைய கைகேயி, பகைச் செய்கைகளையும், ஒழுங்கில்லாச் செயல்களையும் செய் வாள். (ஆகையால்) என்னுடைய தாயை அற முணர்ந்த பரதனிடம் காப்பாற்றும்படி ஒப்புவி.'

இன்னும்

**ஏகோயாஅ மயோத்3யஞ்ச**
**ப்ருத்வீஞ்சாபி லக்ட்மண**
**தரேயமிருப்3இக்ருத்ஏ**
**நநுவீர்யமகாரணம்**

அதாவது

'ஓ இலக்குமணா, நான் ஒருவனாகவே அயோத்தி மாத்திர மல்ல, இந்நில வுலகம் முழுவதையும் சீற்ற முற்றேனேல் என் அம்புகளின் வன்மைகொண்டு பற்றிக்கொள்ளக் கூடியவன். ஆனால் (அவ்வாறு செய்யாததற்கு) ஆற்றலில்லாமை யன்று காரணம்.'

மற்றென் என்றால்

**அத்4அர்ம ப்4அய ப்4ஈதச்ச**
**பரலோகல்ய சாநக்4அ**
**தேநலக்ட்மண நாத்4யாஅ**
**மாத்மாந மப்3இடேசயே**

அதாவது

'ஓ தீங்கற்ற இலக்குமணா, அறநெறி தவறுவதற்கு அஞ்சியும், பரலோகத்தைப் பற்றி அஞ்சியும், நான் இப்போது முடிசூட்டிக்கொள்ள முயலவில்லை.'

இவ்வாறு இயற்கை உணர்ச்சியைப் பேசிய வால்மீகி ராமனும், பரதனுக்கு இளவரசுப் பட்டம் மகாராஜா அளித்தார் என்று கேட்டதும், "அப்பொழுதலர்ந்த செந்தாமரை" முகத்துடன் காட்டிற்கு விடைகொண்ட கம்பராமனும் ஒருவரேயோ? இரண்டு ராமர்களையும் ஒத்திட்டுப் பார்த்தால் கம்பன் புளுகு அளவிறந்த தென்பது விளங்கும்.

இராமாயண பாராயணம் செய்தால் கிடைக்கும் பயன், கம்ப ராமாயணத் தனியன்களிற் பரக்கக் கூறப்பெற்றுள்ளது. அவற்றுள் சிலவற்றை இங்கே எடுத்துப் பொழியுதும்.

*"நாடிய பொருள்கை கூடும்*
*ஞானமும் புகழு முண்டாம்*
*வீடியல் வழிய தாக்கும்*
*வேரியங் கமலை நோக்கும்*

நீடிய வரக்கர் சேனை
நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன்
தோள்வலி கூறு வோர்க்கே.''

வடகலை தென்கலை வடுகுகன் னடம்
இடமுள பாடைய தொன்றி னுயினும்
திடமுள ரகுகுலத் திராமன் றன்கதை
அடைவுடன் கேட்பவ ரமர ராவரே.

இனையநற் காதை முற்று
மெழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் சொல்வோர்க்
கரும்பொருள் கொடுத்துக் கேட்போர்
கனைகடற் புடவி மீதே
காவலர்க் கரசாய் வாழ்ந்து
வினையம தறுத்து மேலாம்
விண்ணவன் பதத்திற் சேர்வார்.

மேலெடுத்துக் காட்டிய வற்றுள்ளும், காட்டாது விட்டவற்றும், விவரித்துச் சொன்ன பயன்களெல்லாம்

''நாடிய பொருள் கைகூடும்''

என்ற சுருக்கமான முதற் சொற் ெருடரிலே முற்றிலும் அடங்கியுள்ளன வாயினும், இராமாயண பாராயணப் பயன் மிகப் பரந்த தென்பதை வற்புறுத்தும் பொருட்டுப் பலபட வகுத்தும் கூறியிருக்கின்றனர்.

பிள்ளைப் பேறு கிடைத்தலிலாத அலிகளும் (நபும்சகர்கள்) மலடர்களும் கூட ஒரு முறை இராமாயண பாராயணம் செய்தால், கேட்டால் பிள்ளைப் பேறு பெறுவர் என்பது நமது நாட்டில் வேரூன்றிய நம்பிக்கை.

பயனைக் கோரி நம் நாட்டிற் பலவிடங்களிலும் நாளும் நாளும் இராமாயண பாராயணம் செய்வது எல்லோர்க்கும் நன்ருகத் தெரிந்தது. அதிலும் கூடப் பயன் கருதிக் கம்பன் இராமாயணத்தைப் பெரும்பாலும் பாராயணம் செய்வதில்லை. பயன் தவருமற் கைகூடுமென்று வால்மீகி இராமாயணத்தைத்தான் பெரும்பாலும் பாராயணம் செய்வது. கம்பராமாயணம் ஓதினுலும், கவிநயங் கருதித்தான் சிற்சில ப்ராஹ்மணரல்லாதார் ஓதுவது.

ப்ராஹ்மணரோ, தங்கள் தாய்மொழி தமிழேயாயினும், அவர்களுள் பலர், பிழைப்புத் தொழிற்கும் தமிழ்க் கல்வியையே கடைப்பிடித்துள்ளா ராயினும், கம்பராமாயணத்தைப் பாராயண முறையிற் பாராட்டுவது கிடையாது. ஏன் பாராயண முறையிற் பாராட்டுவதில்லை என்று கருதின், எனக்குத் தோன்றுவது, அவர்கள் கம்பன் பெரும் புளுகை நன்குணர்ந்தவர்கள் என்பதுதான். புனைந்த பொய்க் கதையோதில் நற்பயன் தராதென்று கண்டும், பயன் தரினும் மாறுபட்ட தீப்பயன் தருமென்று அஞ்சியும், வாய்மை பேசும் வால்மீகி இராமாயணத்தையே அவர்

கள் பாராயணம் செய்வதும், படிக்கும் சாஸ்திரி யாருக்குப் பணம் பாராயணம் கேளாத பல்லோரிட மிருந்தும் தண்டல் செய்து .கொடுப்பதும், இராமன் பட்டாபிஷேகம் என்று பெயர் வைத்து விழாக் கொண்டாடுவதில் நான்கண்ட அளவில், படித்த சாஸ் திரியாருக்கும் அவர் 'மனைவி சாஸ்திரி' யாருக்கும் புத்தாடை யுடுத்துப் புது மணக்கோலம் செய்து ஊர்வலம் செய்விப்பதுமே யாம்.

ஆனால் நீங்கள் என் கருத்தை வெட்டிப் பேச இடமுண் டென்பதை ஒப்புகிறேன். 'மனுஷ்ய பாஷையாகிய தென்னாட்டு வறட்டுத் தமிழில், அதா வது ஸம்ஸ்க்ருதக் கலப்புக் குறைவால் வறண்ட தமி ழில், சூத்திரனாகிய கம்பன் என்பான் செய்த ராமா யணத்தைப் ப்ராஹ்மணர் கேட்கக் கூடாதென்ப தன்றிக் கம்பன் புளுகுகிறா னென்றல்ல வென்றும்–மகரிஷியாகிய வால்மீகி தெய்வ பாஷையாகிய ஸம்ஸ்க்ருதத்தில் ஆக்கிய ராமாயணமே சிறந்தது என்றும் – அத்தகைய வால்மீகி ராமாயணச் சிறப்பு மிகவும் தாழ்மையான மற்றொரு ராமாயணத்துடன் ஒத்திட்டுப் பார்த்தால்தான் நன்கு விளங்குமென்றும் தான் பாடியதாகக் கம்பனே,

*"வய்ய மென்னை யிகழவு மாசெனக்*
*கெய்தவு மிதியம் புவதி யாதெனிற்*
*பொய்யில் கேள்விப் புலமையி னோர்புகல்*
*தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே"*

எனச் சொல்லி யிருத்தலால் ப்ராஹ்மணர்கள் வால்மீக ராமாயணத்தையே பாராயணம் செய்கிறார்கள்' எனக் கூறுவீர்களேல் அதனையும் யான் மறுக்கேன். ஆனால் நுங்கள் கூற்று குறைக் கூற்றென்று மாத்திரம் சொல்லவேண்டியது என் கடமை. ஏனெனில்,

> *"பொய்யில் கேள்விப் புலமையினோர் புகல்*
> *தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே"*

கம்பன் தான் மனுஷ்ய பாஷையில் நொய்தினெய்ய சொல்லாற் புளுகினதை அவர் நிலையில் வைத்துச் சொல்லி யிருப்பதை நோக்குவிரேல் யான் கம்பன் பேரில் வீண் குற்றம் காட்டியதாகக் கொள்ளமாட்டீர்கள். அன்றேல் கம்பன் வால்மீகியைப் பொய்யில் கேள்விப் புலமையினோ ரென்று அடைகொடுத்துச் சொல்லவும், தெய்வ மாக்கவி என்று சிறப்பிக்கவும் வேண்டுவதில்லை.

வால்மீகி ராமாயணத்தைப் பாராயணம் செய்தால் கிடைக்கும் பயன் பல்வேறு வகைகளென்று முன்னியம்பியவற்றுள் மலடர்களுக்குப் பிள்ளைப்பேறு கிடைக்கு மென்ற தொன்றன்றோ? அந்தப் பலனைக் கம்ப ராமாயணப் பாராயணம் கொடுக்கும் வன்மையுடைய தல்லவென்று சொல்ல இடமிருக்கிறது. ஏனெனில் அதைத் திருப்பித் திருப்பிப் படித்தாலும் ஆணிற்குப் பெண்மீது நினைப்பை ஊக்கவும் பெண்ணிற்கு ஆண்மீது நினைப்பை ஊக்கவும் ஆன செய்யுட்கள் தென்படுவதில்லை.

வான்மீகி ராமாயணமோ அவ்வாறன்று. அதில் ஆங்காங்கு மிகவும் எளிய அழகிய நடையிற் செய்த ஸ்லோகங்களில் கண்கூடுபடுத்தப் பட்டிருக்கிற லதாக் கிரகங்களும் அவைகளில் இருபாலர்கள் இருக்கும் கோலங்களும் செய்யும் கிரியைகளும் தேவபாடையில் மாத்திரம் சொல்லக் கூடியவைகளாய், இப்போதைய அரசாங்கச் சட்டப்படி, தமிழிற் சொன்னுலோ தலை போய்விடச் செய்யக் கூடியவைகள். அத்தகையவை களைப் படிக்கும், கேட்கும் நபும்சகரைப் பும்சகராக் கக் கூடியனவும், மலடனைக் கருவிடும் வன்மையனும், மலடியைக் கருவேற்கும் தன்மையோளுமாக ஆக்கக் கூடியவைகளுமான திரண்ட நீண்ட பரந்த விரிந்த விவரங்கள் பிள்ளைப் பேறு கோருவோர்க்குக் கட்டா யம் பிள்ளைப் பேற்றுப் பயனைக் கொடுக்கு மென்று வால்மீகி ராமாயணம் படியாத பலருக்கும் உறுதி யாகச் சொல்லுவேன்.

ஆனுல் வால்மீகி ராமாயண 24000 ஸ்லோகங் களையும் ஒருமுறை அர்த்த புஷ்டி யென்கிற விருத்தி யுரையுடன் பாராயணம் செய்து முடிக்கப் பல திங் கள்கள் செல்லும். அதுவரையில் பிள்ளைப் பேற்றிற் குக் காத்திருக்க வேண்டும்.

# பின் இணைப்பு

*[மஹரிஷி சிவத்யானந்தர் அவர்கள் திரு. பா. வே. மாணிக்க நாயக்கருக்கு 1—3—1919-ல் எழுதிய திருமுகம்:]*

Maharshi SIVADHYANANDA,
The Vedic Bureau,
Anandasrama,
Coonoor, Nilgiris,
*1st March 1919.*

Dear Sir,

I have herewith enclosed some of my ideas on the subject. I do not like to condemn Kamba Ramayanam for the mere reason that Kamban has changed the story here and there. My idea was to direct my readers to Valmiki and take the story from the original to discuss the sanctity of Ahalya. For I know that Kamban has in his devotional heat carried the story to the ludicrous pitch. Our ancient and sanathana creed is that Dharma is eternal and that anybody can practise the Dharma and attain the goal. So everybody can be everbody's saviour. Even the Westerners have opened their eyes to this theory and men like Allen, Emerson,. Trine, Tolstoy, etc, propound only this theory. Mere professing an accepted creed and abusing another will not save a man. I am sorry here to note that Kamban unlike Villi has behaved very one-sided in calling *திருவாசகம்* a barren corn. He did this as a time-serving instrument for

gaining the favour of the Srirangam Brahmans. For one who believes that the vegetarian non-brahmins who are for generations so, must be included into the brahminic fold and be taught the Ahnika Karmams this sectarian carping words will certainly look peurile if not wounding.

Kindly excuse my inability to attend the meeting as my this month's Vedic part is not finished and as the intimation was received at a late hour.

I shall be thankful if you could let me know the result of the meeting.

Yours truly,

**(Sd.) SIVADHYANANDA.**

P. S. Valmiki's Ramayanam is a narrative epic written in chaste and simple style and Kamban has made a drama of whole by dilating too much on the expounding of human passions and sentiments. Kamba Ramayanam does not give an insight of the Solar King's times whereas Valmiki gives a clear idea of the manners and customs of the times and the ethic and the moral code that was in vogue then.

# பாடல்களின் பொருள்

பக்கம் 12 :— இறையும் ஞானமிலாதவென் புன் (சொலை)
முறையில் நூலுணர்ந் திரு முனிவிரோ.

பொருள்:— சிறிதேனும் நூலாராய்ச்சி இல்லாத என்னுடைய பொருளற்ற சொற்களைக் கண்டு முறை பிறழாது நூல்களை ஓதியுணர்ந்த பெரியோர்கள் கோபிப்பார்களோ?

பக்கம் 13 :—

நாரணன் விளையாட் டெல்லாம் நாரத முனிவன் கூற
ஆரணக் கவிதை செய்தான் அறிந்தவான் மீகி யென்பான்
சீரணி சோழ நாட்டுத் திருவழுந் தூருள் வாழ்வோன்
காரணக் கொடையான் கம்பன் தமிழினுற் கவிசெய் தானே.

பொருள்:— நாரத முனிவன் திருமாலின் அமிசமாகிய இராமனது சரித்திர முழுமையும் கூற, அதனைக் கேட்டு உணர்ந்த வால்மீகி என்னும் முனிவன் வேதத்திற்கு ஒப்பான கவிகளால் அந்த இராம சரித்திரத்தைச் செய்தான். பின்பு அச் சரித்திரத்தைச் சிறப்பு வாய்ந்த சோழ நாட்டிலே உள்ள திருவழுந்தூர் என்னும் ஊரிலே வாழ்பவனும், புகழுக்குக் காரணமாகிய கொடையிற் சிறந்தவனுமாகிய கம்பன் தமிழ்ப் பாடலாகச் செய்தனன்.

பக்கம் 14 :— தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவ ரானவர் தம்முளும் முந்திய
நாவி னுருரை யின்படி நான்தமிழ்ப்
பாவி னுலி துணர்த்திய பண்பரோ.

பொருள்:— வடமொழியில் இராமாயணத்தைச் செய்தவர் வால்மீகி, வசிட்டர், போதாயனர் என மூவராவர். இவர்களுள் முதல்வராகிய நாவன்மை படைத்த வால்மீகி உரைத் துள்ளபடி நான் இவ்விராமாயணத்தைச் செய்துளேன்.

பக்கம் 14 :— ............................ அபிநவ கவிநாதன்
விழுந்த ஞாயிறு எழுவதன்
முன்மறை வேதிய ருடனுராய்ந்
தெழுந்த ஞாயிறு விழுவதன்
முன்கவி பாடின தெழுநூறே.

பொருள்:— புதுமையாகக் கவிபாட வல்ல கம்பன் மாலையில் மேற்குத் திசையில் மறைந்த சூ ரி ய ன் மறுநாள் காலையில் கீழ்த் திசையில் தோன்றுதற்கு முன்பு (அதாவது இரவு வேளை யில்) புதிய முறையில் வேத ஆறிவு மிக்க வேதியருடன் வட மொழி இராமாயணத்தை ஆராய்ந்து, கீழ்த் திசையில் தோன் றிய சூரியன் மேற்குத் திசையில் மறைவதற்குள் (ஒரு பகலில்) எழுநூறு கவிகள் பாடினுன்.

பக்கம் 19 :— "நெற் கொண்டு போமளவும்
நில்லாய் நெடுஞ் சுவரே"

பொருள்:— என்னுல் கட்டப்பட்ட பெரும் மண் சுவரே, நான் நெல்லைக் கூ லி யா க ப் பெற்றுக் கொண்டு போகும் வரை நிற்பாயாக!

பக்கம் 20 :— "பொய்யுடை யொருவன் சொல்வன் மையினுல்
மெய்போ லும்மே மெய்போ லும்மே"

பொருள்:— பொய்யே நிறைந்த ஒருவன் தன்னுடைய சொல் ஆற்றலினுல் தன் பொய்மையையும் உண்மை போலத் தோன் றும்படிச் செய்வான்.

பக்கம் 21 :— "காயுங் கானிற் கிழங்குங் கனிகளும்
தூய தேடிக் கொணர்ந்தனர் தோன்றல்நீ
ஆய கங்கை யரும்புனல் ஆடினே
தியை யோம்பினே செய்யமு தென்றனர்"

பொருள்:— காட்டிலிருந்து தூய்மையான காய்களையும் கிழங் குகளையும் பழங்களையும் முனிவர்கள் தேடிக் கொண்டு வந்தனர்.

அவர்கள் இராமனை நோக்கி, 'சிறந்து விளங்குபவனே, நீ அருகிலுள்ள கங்கை நதியின் அருமையான நீரில் மூழ்கி, அக்னியை வளர்த்து இக் காய்கனிகளை உண்பாயாக' என்று வேண்டினர்.

பக்கம் 22 :—

'இருத்தியீண் டென்ன லோடும் இருந்திலன் எல்லை நீத்த
அருத்தியன் தேனும் மீனும் அமுதினுக் கமைவ தாகத்
திருத்தினன் கொணர்ந்தேன் என்கொல் திருவுளம் என்ன வீரன்
விருத்தமா தவரை நோக்கி முறுவலன் விளம்ப லுற்றான்'

பொருள்:— 'இங்கே அமர்வாய்' என்று இராமன் கூறியபோது தான் இராமனோடு ஒப்ப அமர்வது தகுதியாகாது என்று குகன் கருதி அமரவில்லை. இராமனிடத்தில் அளவுகடந்த அன்புடையவனாகிய அக்குகன் இராமனை நோக்கி, 'தங்களுக்கு உணவாக அமையும்படி தேனும் மீனும் பக்குவப் படுத்திக் கொண்டு வந்திருக்கிறேன். இவற்றை உட்கொள்வதில் தங்கள் மனக் கருத்து யாதோ?' என்று கூற, இராமன் முதியவர்களாகிய பெருந் தவசியரை நோக்கிப் புன்முறுவல் செய்து சொல்லத் தொடங்கினான்.

பக்கம் 22 :--

'அரியதாம் உவப்ப வுள்ளத் தன்பினால் அமைந்த காதல்
தெரிதரக் கொணர்ந்த வென்றால் அமிழ்தினுஞ் சீர்த்த வன்றே
பரிவினில் தழீஇய வென்னிற் பவித்திரம் எம்ம னோர்க்கும்
உரியன இனிதின் நாமும் உண்டனெம் அன்றோ வென்றான்'

பொருள்:—இவ் வுணவுப் பொருள்கள், உள்ளன்பினால் தோன்றுவதாகிய பக்தியானது அனைவர்க்கும் புலனாகும்படி மனமுவப்பக் கொண்டுவந்தன வாகும் என்றால் இவைகள் மிகவும் கிடைத்தற்கு அரியனவும் அமிழ்தினுஞ் சிறந்தனவும் ஆகும் அல்லவா? கொண்டுவந்த பொருள்கள் எத்தகையனவாக இருப்பினும் அன்பு பொருந்தியவையாயின் அவை பரிசுத்தமான பொருள்களே, அவை எம் போன்றார்க்கும் ஏற்றுக் கொள்ளுதற்கு உரியவை.

ஆகையால் அவை இனிமையாக நாம் உண்ணுதற்குச் சமானமே யாகும் அல்லவா' என்ருன்.

பக்கம் 23 :—

இயன்றதென் பொருட்டி ஞலிவ் விடருனக் கென்ற போழ்தும்
அயின்றனை கிழங்குங் காயும் அமிர்தென வலிய புல்லில்
துயின்றனை எனவும் ஆவி துறந்திலென் சுடருங் காசு
குயின்றுயிர் மகுடஞ் சூடும் செல்வமுங் கொள்வென் யானே.

பொருள்:— கைகேயியின் மகஞன என் காரணமாக உனக்கு வனவாசமாகிய இத்துன்பம் நேர்ந்தது என்று முன்பு கைகேயி யிஞல் நான் அறிந்த அப்பொழுதும், *கிழங்குகளையும் காய் களையும்* அமிர்தம் போலக் கருதி உண்டாய்; வன்மையான புல்லில் உறங்கிஞய்' என்று அறிந்த இப்பொழுதும் நான் உயிர் நீங்கினேன் இல்லை. ஆகையால் ஒளி வீசுகின்ற மணிகள் பதித்து விலையுயர்ந்த கிரீடத்தை அணிதலாகிய அரச சிறப்பை யும் யான் ஏற்றுக் கொள்வேஞே?

பக்கம் 23 :—

பச்சிலை கிழங்குகாய் பரம னுங்கிய
மிச்சிலே நுகர்வது வேறுதா ஞென்றும்
நச்சிலேன் நச்சினேன் ஆயிஞய் உண்ட
எச்சிலே யதுவிதற் கேது வில்லையால்

பொருள்:— பசிய இலைகளும், கிழங்குகளும் காய்களும் ஆகிய இவற்றில், மேலானவஞகிய இராமன் உண்டு மிகுந்ததையே நான் உண்பது அல்லாமல் வேருெரு பொருளையும் விரும்பி உட்கொள்ள மாட்டேன். அவன் உண்டு மிகுந்ததை யன்றி வேறுணவை நான் விரும்பினேன் ஆயின் அது நாயுண்ட எச் சிலே ஆகும். இதற்குக் காரணம் தேவையில்லை.

பக்கம் 24 :—

'அன்றியும் ஒன்றுள தையயா னினிச்
சென்றனன் கொணர்ந்திடை திருத்தி ஞலது

நுன்துணைக் கோமகன் நுகர்வ தாதலால்
இன்றிறை தாழ்த்தலும் இனிதன்றும் என்றான்'

பொருள்:— 'தலைவனே! நான் சொல்ல வேண்டியது இன்னும் ஒன்றுள்ளது. யான் இனி போய்க் கீரை முதலியவற்றைக் கொண்டுவந்து சித்தம் செய்து வைத்தால் அது உன் நண்பனாகிய இராமபிரான் உண்பதாகும். ஆகையால் இப்பொழுது நான் இங்கு ஒரு கணப்பொழுது தாமதித்தாலும் நல்லதாகாது' என்று இலக்குமணன் கூறினான்.

பக்கம் 31 :—

'ஆழிசூழ் உலகம் எல்லாம் பரதனே யாள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித் தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கான நண்ணிப் புண்ணிய நதிக ளாடி
யேழிரண் டாண்டில் வாவென் றியம்பின னரச னென்றாள்'

பொருள்:— 'கடலால் சூழப்பட்ட உலகம் அனைத்தையும் பரதனே ஆட்சி செய்ய, நீ போய்த் தொங்குகின்ற பெரிய சடைகளைத் தரித்துக் கொண்டு பொறுத்தற் கரிய தவத்தை மேற்கொண்டு புழுதி நிறைந்த கொடிய காட்டைச் சேர்ந்து தூய நதிகளிலே நீராடிப் பதினான்கு ஆண்டுகள் கழிந்த பிறகு திரும்பி வருக என்று மன்னன் ஆணையிட்டான்' என்றாள்.

பக்கம் 32 :—

'இப்பொழு தெம்ம னோரா லியம்புதற் கெளிதோ யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கின்
ஒப்பதே முன்பு பின்பு வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா'

பொருள்:— யாவராலும் சொல்லுதற்கு அரிய பெருங்குணமுடைய இராமனது திருமுகத்தின் அழகினை இப்பொழுது பார்த்தால், எம்போன்றவர்களால் அது விளக்குதற்கு எளிதன்று. ஏனெனில் இதற்கு முன்பெல்லாம் செந்தாமரை மலரைப்

போன்றதாகிய அம்முக அழகு கைகேயியின் சொற்களைத் தெரியக் கேட்டதும் அப்பொழுதுதான் அலர்ந்த செந்தாமரை மலரை வென்று விட்டது.

பக்கம் 32 :—

'தெருளுடை மனத்து மன்னன் ஏவலிற் றிறம்ப அஞ்சி
யிருளுடை யுலகந் தாங்கும் இன்னலுக் கிளைந்து நின்றான்
உருளுடைச் சகடம் பூண்ட உடையவன் உய்த்த காரே(று)
அருளுடை யொருவன் நீக்க அப்பிணி யவிழ்ந்த தொத்தான்'

பொருள்:— அறிவின் தெளிவுபொருந்திய மனமுடைய மன்னனது கட்டளையினின்றும் பிறழ்வதற்கு அஞ்சி, மயக்கத்தை யுடைய உலகத்தைக் காக்கின்ற வருத்தத்திற்கு இசைந்து நின்ற இராமன், சக்கரத்தையுடைய வண்டிக்குரியவனால், செலுத்தப்பட்ட அவ்வண்டியிற் பூட்டப்பட்ட கரிய எருது தன்னைக் கருணையை யுடைய வேறொருவன் அவ்வண்டியி னின்றும் நீக்குதலால் அவ்வருத்தம் நீங்கியதனை ஒத்தான்.

பக்கம் 32 :—

மன்னவன் பணியன் றாகில் நும்பணி மறுப்ப னோவென்
பின்னவன் பெற்ற செல்வம் அடியனேன் பெற்ற தன்றோ
என்னினி யுறுதி யப்பால் இப்பணி தலைமேற் கொண்டேன்
மின்னொளிர் கான மின்றே போகின்றேன் விடையுங் கொண்டேன்'

பொருள்:— இராமன் கைகேயியை நோக்கி, ''மன்னவனது கட்டளை அன்றாயினும் தங்கள் கட்டளையை நான் மறுப்பேனோ? என் தம்பியாகிய பரதன் அடைந்த செல்வம் நான் அடைந்த தல்லவா? இக் கட்டளையைத் தலைமேல் ஏற்றுக் கொண்டேன்; வெயில் விளங்குகின்ற காட்டிற்கு இப்பொழுதே செல்கின்றேன். தங்களிடத்து உத்தரவு பெற்றுக் கொண்டேன்'' என்றான்.

பக்கம் 33:—

'குழைக்கின்ற கவரி யின்றிக் கொற்றவெண் குடையும் இன்றி
யிழைக்கின்ற விதிமுன் செல்லத் தருமம்பின் னிரங்கி யேக

மழைக்குன்றம் அனையான் மௌலி கவித்தனன் வருமென் றென்று
தழைக்கின்ற உள்ளத் தன்னுள் முன்னொரு தமியன் சென்றான்'

பொருள்:— மேகங்கள் பொருந்திய மலையை ஒத்த இராமன் கிரீடத்தை அணிந்து கொண்டு வருவான் என்று மகிழ்கின்ற மனமுடைய கோசலைக்கு முன், வீசுகின்ற சாமரமில்லாமல் வெண் கொற்றக் குடையும் இல்லாமல் நன்மை தீமைகளை உண்டாக்குகின்ற ஊழ்வினை முன்னே போகவும் அறக்கடவுள் வருந்திப் பின்னே வரவும் இராமன் தன்னந் தனியனாய் வந்து சேர்ந்தான்.

பக்கம் 33 :—

'புனைந்திலன் மௌலி குஞ்சி மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன் என்கொல் என்னும் ஐயத்தாள் நளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன் வணங்கலும் குழைந்து வாழ்த்தி
நினைந்ததென் னிடையூ றுண்டோ நெடுமுடி புனைதற் கென்றான்'

பொருள்:— இராமன் கிரீடத்தை அணிந்து கொள்ள வில்லை; தலைமயிர் நீராட்டத்திற்குரிய தூய்மையான நீரினால் நனையப் பெற்று னில்லை; இதற்குக் காரணம் யாதோ? என்கிற சந்தேகத்தைக் கொண்ட கோசலையினுடைய தாமரை மலர்போன்ற திருவடிகளைப் பொன்னால் செய்த வீரக் கழல் அணிந்த திருவடியை யுடைய இராமன் வணங்கலும் அவள் மனம் குழைந்து அவனை வாழ்த்தி, 'மன்னன் கருதிய காரியம் என்ன ஆயிற்று' பெரிய கிரீடத்தைச் சூடுதற்கு யாதாயினும் தடையுளதோ?'' என்றாள்.

பக்கம் 34 :— 'மங்கை யம்மொழி கூறலும் மானவன்
செங்கை கூப்பிநின் காதற் றிருமகன்

பங்க மில்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றனென்றான்'

பொருள்:— கோசலை அம்மொழிகளைக் கூறியதும் இராமன் தன் சிவந்த கைகளைக் கூப்பிக் கொண்டு, 'தங்களது அன்புமிக்க அழகிய மகனும், எனது தம்பியுமாகிய குற்றமில்லாத குணங் களையுடைய பரதனே உயர்வு பொருந்திய சிறந்த கிரீடத்தை அணிந்து கொள்கின்றான்' என்றான்.

பக்கம் 34 :— 'முறைமை யன்றென்ப தொன்றுண்ட தல்லது
நிறைகு ணத்தவன் நின்னிலும் நல்லனால்
குறைவி லன்எனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள்'

பொருள்:— இராமன். இலக்குவன், பரதன், சத்துருக்கனன் என்ற நான்கு புதல்வர்களிடத்தும் குற்றமற்ற அன்பு செலுத்து வதில் வேறுபாடில்லாத கோசலை, மூத்தவன் இருக்க இளையவன் அரசாளுதல் அரச நீதியன்று என்கிற ஒரு குறை மட்டும் உண்டு; அதுவல்லாமல் மற்றைப்படி பரதன் யாவரினும் நிறைந்த குணத்தை யுடையவன்; உன்னைக் காட்டிலும் நல்ல வன்; அன்றியும் ஒருவகையாலும் குறைவு இல்லாதவன்' என்று சொன்னாள்.

பக்கம் 47 :—

'நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழும் உண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே'

பொருள்:— அழிவில்லாத அரக்கரது சேனைச் சாம்பராய் அழிந்து போக வெற்றி மாலையை அணிந்த வில்லை ஏந்திய

இராமனது தோள் வலிமையைப் பாராட்டிக் கூறுபவர்களுக்கு அவர்கள் வேண்டிய பொருள்கள் அனைத்தும் கைகூடும்; உண்மை அறிவும் புகழும் உண்டாகும்; மோட்சத்தை அடைவதற்கு ஏற்ற வழியை உண்டாக்குகின்ற நறுமணமுள்ள அழகிய தாமரையில் வாழும் திருமகளும் அவர்களுக்கு அருட் பார்வை புரிவாள்.

பக்கம் 48 :— 'வடகலை தென்கலை வடுகு கன்னடம்
இடமுள பாடையா தொன்றி ளாயினும்
திடமுள ரகுகுலத் திராமன் தன்கதை
யடைவுடன் கேட்பவர் அமரர் ஆவரே'

பொருள்:— வடமொழியோ, தமிழோ, வடுகரின் மொழியோ, கன்னட மொழியோ—இவ் வுலகத்தி லுள்ள எந்த மொழியாயினுஞ் சரி, வலிமை பொருந்திய இரகு குலத்திலே தோன்றிய இராமனது சரித்திரத்தை முறைப்படி கேட்பவர் தேவர்களாகி விடுவார்கள்.

பக்கம் 48 :—

'இனையநற் காதை முற்றும் எழுதினோர் வியந்தோர் கற்றோர்
அனையது தன்னைச் சொல்வோர்க் கரும்பொருள் கொடுத்துக் கேட்டோர்
கனைகடல் புடவி மீதே காவலர்க் கரசாய் வாழ்ந்து
வினையம தறுத்து மேலாம் விண்ணவன் பதத்திற் சேர்வார்'

பொருள்:— இத்தகைய சிறந்த இராம சரித்திரம் முழுவதையும் எழுதினவர்களும் அதன் பெருமையைக் குறித்து வியந்தவர்களும் படித்தவர்களும் இந்த இராம சரித்திரத்தைச் சொல்பவர்க்கு அரிய பொருளைக் கொடுத்துக் கேட்டவர்களும் ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட இப்பூமியின் மீது அரசர்க் கரசராய்

சிறப்புடன் வாழ்ந்து தீவினையை ஒழித்து, உயர்ந்த தான இறைவன் பரம பதத்தில் சேர்வர்.

பக்கம் 50 :— 'வையம் என்னை இகழவும் மாசெனக்
கெய்தவு மிதியம் புவதி யாதெனிற்
பொய்யில் கேள்விப் புலமைபி னோர்புகல்
தெய்வ மாக்கவி மாட்சி தெரிக்கவே.'

பொருள்:— இவ்வுலகிலுள்ள பெரியோர் இந்தச் சிற்றறிவு உடையவன் இராமாயணத்தைப் பாடத் தொடங்குகிருனே என்று என்னை இகழ்ந்து கூறவும் எனக்குத் தீங்கு நேரவும் இந்த இராம சரித்திரத்தை நான் சொல்வதற்குக் காரணம் யாதெனில் குற்றமற்ற நூலறிவும் சிறந்த புலமையும் உடைய வணுகிய வான்மீகி இராமபிரானைப் பற்றிச் சொல்லியுள்ள சிறந்த பாடல்களின் பெருமையைத் தெரிவிப்பதற்கே யாகும்.

முற்றும்

*

கலைக்கதிர் அச்சகம்,
அவனாசி ரோடு,
கோயமுத்தூர்.

*

என்பது அவர் ஆராய்ந்து தெளிந்த உண்மை.

சேலம் மாவட்டத்திலுள்ள மேட்டூர் அணைக்கு முதன் முதல் இடம் தெரிந்தெடுத்துத் திட்டம் வகுத்தவர் மாணிக்க நாயக்கரே ஆவர். ஆனால் மேட்டூர் அணையின் வரலாற்றில் அவருடைய பெயரைக் காண முடியாது!

''தொல்காப்பியச் சுவடி'', ''அஞ்ஞானம்'', "The Mystic Aspect of the Tamil Alphabet", "Betwixt Ourselves and the Madras Zoo"—இவை அவர் எழுதிய ஏனைய நூல்களாம்.

விலை
ரூபாய்
**1-4-0**

இந்நூல் கிடைக்குமிடம்:

[illegible]

[illegible]

[illegible]

பினாங் [illegible] — [illegible]த்தூர்.